
Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

**புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்**

மலர் - 19 இதழ் - 9 செப்டம்பர் - 2006



## கிறிஸ்துவின் சபை

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 ; 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# ஜெபியுங்கள்

1. அக்டோபர் 2, 3 – 2006 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ள ஒன்பதாம் வேதாகம கருத்தரங்கில் அநேகர் கலந்து கொண்டு, ஆவிக்குரிய நன்மைகள் பெற.

2. அடியேனும், அடியாளும் மேற்கொண்டிருக்கும் [செப்டம்பர் 18–28] எகிப்து, இஸ்ரேல், ஜோர்டான் ஆகிய நாடுகளின் பயணம் பயனுள்ளதாவும், பாதுகாப்பானதாகவும் அமைய.

- ஆசிரியர்

## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ..... 1
2. ஒன்பதாம் வேதாகம கருத்தரங்க அழைப்பு ..... 9
3. நீங்கள் கிறிஸ்தவன் என்ற பெயரில் மட்டும் இருக்க முடியுமா? ..... 10
4. பெண்கள் பகுதி ..... 14
5. வாலிபர் பகுதி ..... 17
6. சிறுவர் பகுதி ..... 21
7. விசுவாசத்தின் அடிப்படைகள் ..... 23
8. பொறாமை - எலும்புருக்கி நோய் ..... 28
9. சந்தோஷமாயிரு ..... 31

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 19 SEPTEMBER - 2006 Issue - 9

ஆசிரியர் உரை

## நீ மிகவும் பிரியமானவன்

அன்பு என்ற மூன்றெழுத்து வார்த்தை மத உலகிற்கான மந்திரச் சொல்லாக இருக்கிறதென்பது நாம் அறிந்த ஒன்று. இவ்வார்த்தையின் ஆழத்தையும், அர்த்தத்தையும் அடிப்படையாகக் கொண்டே கிட்டத்தட்ட எல்லாக் கோட்பாடுகளும் பின்னப்பட்டிருக்கிறது. அன்பு என்ற இவ்வார்த்தை, அடிப்படையாக மாத்திரம் இராமல், சில சந்தர்ப்பங்களில், அடையாளமாகவும் இருக்கிறது. ஆம், இரண்டு பேருக்கிடையே இருக்கும் நெருக்கத்தையும், பாசத்தையும் வெளிப்படுத்தும் ஓர் அடையாள வார்த்தையாகவும் அன்பு திகழ்கிறது. தேவன் அன்பாக இருக்கிறார் (1யோவா 4:8) எனறு தேவாதி தேவனுக்கே அடையாளமாகப் பேசப் பட்டிருக்கும் இவ்வார்த்தையின் பரிணாமத்தை என்னைப் போன்றவர்களால் முழுமையாக விளக்குவது கூடாத காரியம். இருப்பினும், பிரியம் என்ற அழகிய வார்த்தையைக் கொஞ்சம் கிட்டப் போய்ப்பார்த்தால், அது அன்பைக் காட்டிலும் அதிக வசீகரமுள்ளதாகவும், இன்னும் கூடுதலான பொருளைக் கொடுக்கக் கூடியதாகவும் இருக்கிறதென்பதை நாம் அறிந்து கொள்ளலாம். எப்படியெனில், இச்சீர்மிகு வார்த்தையை ஆவியானவர், பழைய, புதிய ஏற்பாடுகளில், பக்தியாக வாழ்ந்த அனைவருக்கும் பயன் படுத்தாமல், விரல் விட்டு எண்ணக் கூடியவர்களுக்கே பயன்படுத்தியுள்ளார். ஆவியானவர் காரியங்களை ஆராய்ந்து, அளந்து செய்கிறவராக இருக்கிற படியால், இவ்வார்த்தையை இப்படிப் பயன்படுத்தியதன் மூலம் இதற்குத் தனி மரியாதை தரப்பட்டிருக்கிறதாகவே தெரிகிறது.

சரி, இச்சீர்மிகு வார்த்தைக்குச் சொந்தமாக இருப்பவர்களில் ஒருவன் தான் தன்னிகரில்லா தானியேல். இந்தத் தானியேலை, பிரியமானவர்களில் ஒருவன் என்று சொல்லுவதா அல்லது அவர்களிலும் தனித்து நிற்பவன் என்று சொல்லுவதா என்பது விடை காண முடியாத விவாதத்திற்குரிய ஒன்று. ஏனெனில், இவனைப் பற்றிப் பேச ஆரம்பித்தால், எங்கே ஆரம்பித்து, எப்படி முடிப்பது; எதைச் சொல்லுவது, எதை விடுவது என்பது ஒரு சவாலாகி விடுகிறது. புதிய ஏற்பாட்டிலுள்ள எபிரெயர் நிருபத்தின் 11ம் அதிகாரத்தில் விசுவாசிகளின் பட்டியல் ஒன்று நமக்கு வெளியிடப்பட்டுள்ளது. அம்மாமனிதர்களெல்லாம் ஆவிக்குரிய வாழ்வில் புடம் போட்ட தங்கங்கள். ஆயினும், அவர்களுடைய ஒட்டு மொத்த வாழ்க்கையைக் கண்ணோக்கும் போது, அது ஏற்ற, இறக்கங்களைக் கொண்டதாகவும், சில சந்தர்ப்பங்களில் தடுமாற்றத்திற்கும், தவறுகளுக்கும் உட்பட்டதுமாகவே உள்ளது. ஆனால், ஆதிமுதல் குறைகளைச் சுட்டிக்காட்டித் தட்டிக் கேட்கும் ஆவியானவர், இந்த தானியேலுடைய நீண்ட வாழ்க்கையை வெளிப்படுத்தும் போது, **இவனுக்கு எதிராக எதையுமே பேசாமலிருப்பதை** நாம் கவனிக்கத் தவறிவிடக் கூடாது. இத்தனைக்கும் இவனுடைய இளம் பிராயம் முதல், நரை வரைக்குமான வாழ்க்கை நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் குறையேதும் சுட்டிக்காட்டப்பட்டதாகவோ, தவறு தட்டிக் கேட்கப்பட்டு தண்டிக்கப் பட்டதாகவோ எதுவுமேயில்லை.

தானியேல் காலத்தில் வாழ்ந்த இன்னொரு பெரிய தீர்க்கதரிசியாகிய எசேக்கியேல், இந்தத் தானியேலின் நீதியைப் பிறரோடு ஒப்பிட்டுப் பேச வேண்டிய அவசியம் நேர்ந்த போது, அவன் வாழ்ந்த மோசேயின் காலத்தைச் சேர்ந்த எந்தவொரு தேவ மனிதனின் வாழ்க்கையோடும், ஒப்பிடாமல், **முற்பிதாக்களின் காலத்தைச் சேர்ந்த நோவாவோடும், யோபுவோடும் ஒப்பிட்டுப் பேசியுள்ளான்** (எசே 14:14,20). ஆவியானவர், இப்படி எசேக்கியேலை ஏவியதற்கு நாம் ஏதாவது காரணம் கொடுக்க முடியுமா? ஒருவேளை, மோசேயின் காலத்தில் வாழ்ந்த யாருடைய நீதியும், இவன் நீதியோடு ஒப்பிடுவதற்குத் தகுதியில்லாமல் இருந்திருக்குமோ?.

இப்படி ஒப்பாரும் மிக்காருமற்ற இந்தத் தானியேலிடம் தான் தேவன் ஒரு சமயம், நற்காரியங்களுக்கான தன்னுடைய தூதனாகிய காபிரியேலைக் கொண்டு இவ்விதம் பேசியுள்ளார். "**நீ மிகவும் பிரியமானவன், ஆதலால், நீ வேண்டிக் கொள்ளத் தொடங்கின போதே கட்டளை வெளிப்பட்டது. நான் அதை அறிவிக்க வந்தேன்...**" (தானி 9:23) என்று. சர்வ வல்ல தேவன், ஒருவனின் மன்றாட்டுக்கான பதிலை இந்த வகையில் வேறு யாருக்காவது கொடுத்துள்ளாரா? எனக்குத் தெரிய யாரும் இல்லை. நாமும் தான் இருக்கிறோம், தேவனிடமிருந்து ஒன்றை நமக்காக, நம் குடும்பத்திற்காக, நம் சபைக்காகப் பெற்றுக் கொள்வதற்கு மணிக்கணக்கில், நாள் கணக்கில்,

வாரக் கணக்கில், மாதக்கணக்கில் ஏன், வருடக் கணக்கில் கூட மன்றாடுகிறோம். அப்படியே மன்றாடினாலும் நாம் விரும்புகிறபடி அது நமக்குக் கிடைப்பதில்லை. அப்படித்தானே. ஆனால், இங்கோ நிலைமை தலைகீழாகவும், ஆச்சரியமாகவும் உள்ளது. ஆம், தானியேல் வேண்டிக் கொள்ளத் தொடங்கின போதே, அதாவது, அவனுடைய தேவை என்ன என்று தெரிவிக்கும் முன்பாகவே, பரலோக தேவன் அவன் தேவையை ஏற்று, காபிரியேல் தூதனைத் தீவிரமாய் அனுப்பி "ஒப்புதல்" சொல்லிவிட்டார்!

இப்படிப் பரலோக அங்கீகாரம் இவனுக்கு உடனடியாகக் கிடைத்திருப்பது, நாமெல்லாம் சில வேளைகளில் எண்ணுவதுபோல அதிர்ஷ்டத்தினால் நடந்ததல்ல. ஏனெனில், நம்முடைய தேவன் ஒத்தை, இரட்டை பிடித்து மன்றாட்டுக்கு "ஒப்புதல்" கொடுப்பவரல்ல. காரண காரியங்களின் அடிப்படையில் பகுத்துப் பார்த்து, ஒருவனுடைய பக்திப் பண்புகளை "தேவ நீதி" என்ற தராசில் நிறுத்தி, அதனடிப்படையில் தன் நீதியை நிலைநாட்டுபவர். பரலோக அங்கீகாரத்தையும், விண்ணப்பங்களுக்கான ஆணையையும் தகுதியில்லாதவர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுத்து விடமாட்டார். அப்படிப்பட்டவர், வேண்டிக் கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை பிறப்பித்திருக்கிறார் என்றால் அதற்குப் பலமான காரணங்கள் கண்டிப்பாக இருக்க வேண்டும். தேவன் தன் நீதியில் ஒரு போதும் தவறிழைக்கமாட்டார். அப்படியானால், தானியேல், பரலோக அங்கீகாரத்திற்கு முழுக்க முழுக்க ஏற்றதொரு வாழ்க்கை வாழ்ந்திருக்கவே வேண்டும். அப்படித்தானே.

சரி, இப்பொழுது இப்படி பரலோக அங்கீகாரமும், அநுக்கிரகமும் பெற இந்தத் தானியேலிடம் மண்டிக்கிடந்த பல பக்திப் பண்புகளில் சிலவற்றைப் பொறுக்கியெடுத்து இம்மாதம் பார்த்துப் பயனடைவோம்.

**I தானியேல் தீர்மானமுடையவனாயிருந்தான்:-**

ஒப்பாருமிக்காருமற்ற தானியேல் வேண்டிக் கொள்ளத் தொடங்கின போதே கட்டளை பிறந்ததற்கான காரணங்களில் முதலாவது, அவன் தன் பக்தி வாழ்வில் தீர்மானமுடையவனாயிருந்தான் என்பது.

நேபுகாத்நேச்சார், எருசலேமை வெற்றி கொண்டு ராஜாவையும், வேறு அநேகரையும் பிடித்து, தேவனுடைய ஆலயத்திலுள்ளவைகளை எடுத்துச் சென்றான். (தானி 1:1,2). அப்படிப் பிடித்துச் சென்றவர்களில் அழகும், அறிவும், திறமையும் உள்ளவர்களைக் கண்டுபிடித்து ராஜாவின் அரமனையில் சேவிக்கத்தக்க அளவு அவர்களை மேலும் மெருகேற்றும்படியாய், அவர்களுக்கு கல்தேயருடைய பாஷையும், எழுத்தும் கற்பிக்கப்படும்படி பிரதானிகளின் தலைவனாகிய அஸ்பனேசுக்குக் கட்டளையிட்டான் (1:3,4). இந்த தகுதியை அவர்கள் பெற்றுக் கொள்வதற்கு, **தேவையான பயிற்சியோடு, ராஜ போஜனமும்** அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் (1:5).

பிடித்துச செல்லப்பட்ட இடத்தில், இவர்களுடைய பெயர்கள் முதலாவது பாபிலோனிய பாணிக்கு மாற்றப்பட்டது. இப்பொழுது இவர்கள், பயிற்சிக்கும், ராஜ போஜனத்திற்கும் தயார். அடிமையாகக் கொண்டு செல்லப்பட்ட இடத்தில், ராஜபோஜனம்; ஆஹா, எப்படியிருந்திருக்கும்! நாமாக இருந்திருந்தால் என்ன செய்திருப்போம். "காஞ்ச மாடு கம்மங்காட்டுலே பூந்த மாதிரி", வயிற்றைக் காயப்போட்டு ஒரு பிடிபிடித்திருப்போம். ஆமாம் தானே! ஆனால், இந்தத் தன்னிகரில்லா தானியேல், தன் கூட்டாளிகளோடு சேர்ந்து என்ன தீர்மானம் செய்தான் என்று கண்ணைத் திறந்து பாருங்கள். "தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவன் பானம் பண்ணும் திராட்ச ரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகா தென்று **தீர்மானம் பண்ணிக் கொண்டு,** தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக் கொண்டான்" .(1:8)

"எள்ளுப் பொறுக்கப் போன இடத்தில் எலுமிச்சங்கனி" என்பது போல, அடிமையாகக் கொண்டு செல்லப்பட்ட அந்நிய மண்ணில் அரண்மனை வாழ்க்கை. ஆயினும், அதை அஞ்சு காசுக்கு மதிக்காமல், தேவையில்லை உன் போஜனம் என்று தீர்மானம். ஏன், என்ன காரணம்? பிழைக்கத் தெரியாதவனா? அல்லது புத்தியில்லாதவனா? என்ன தான் காரணம்? நமக்குச் சொல்லப்படவில்லை. ஆனால், ஒருவேளை ராஜபோஜனத்தின் அயிட்டங்களில் அடங்கியிருக்கும் மாமிசம், ஒரு யூதனுக்கு விலக்கப்பட்ட மாமிசமாக இருந்திருக்கலாமோ அல்லது முறையற்ற முறையில் தயாரிக்கப்பட்டிருக்கலாமோ அல்லது பரிமாறப்படுவதற்கு முன் விக்கிரகங் களுக்கு அவை படைக்கப்பட்டதாயிருந்திருக்கலாமோ. யாருக்குத் தெரியும்? ஆகவே, என் தேவனுக்கு விரோதமானது எனக்கு வேண்டாம், என்ன ஆனாலும் வேண்டவே வேண்டாம்.

அருமையானவர்களே, தேவனுக்கான நம்முடைய வாழ்க்கையின் நிலை எப்படியுள்ளது? எண்ணிப்பார்ப்போம். அவருக்காக, நமது பக்தி வாழ்வுக்காக எப்படிப்பட்ட தீர்மானங்களை நம்முடைய வாழ்க்கையில் எடுத்துக் கொண்டுள்ளோம்? தானியேல் தனது 15,16 வயதினில் மாமிசமும், மனசும் விரும்புகிறதை ஓடி ஓடிச் செய்யும் வயதில், ஒளிந்து, ஒளிந்து செய்யும் பருவத்தில் எப்படி தேவனையும், அவர் பிரமாணங்களையும் எண்ணித் தீர்மானம் எடுத்திருக்கிறான் என்று புரிகிறதா? இது, இளைஞர்கள் கவனிக்க வேண்டியது, எனக்கு வயதாகி விட்டது என்கிறீர்களா? பொறுங்கள். ஜன்னல்களைத் திறந்து வைத்து ராஜா கட்டளைக்கு எதிராக தானியேல் தீர்மானம் எடுத்த போது அவனுக்கு வயது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? எப்படியும் 80க்கும் குறையாது. இப்ப என்ன சொல்லுகிறீர்கள், பெரியவர்களே?

தேவனுக்காக, தேவ கட்டளைக்காக, தேவ சேவைக்காக, தேவன் திட்டமிட்ட சபைக்காகத் தீர்மானம் எடுங்கள். வயது பார்க்காதீர்கள், சூழ்நிலை பார்க்காதீர்கள், விளைவு பார்க்காதீர்கள், தேவையானது ஒன்றே

ஒன்று தான். அது அவருக்குப் பயந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவது. அப்படிச் செய்தால், நாம் நமக்காக, நமது (பிர. 12:13) குடும்பத்திற்காக, நமது பக்தி வாழ்வுக்காக வேண்டிக் கொள்வதை தேவன் வாய்க்கச் செய்வார்.

## II தானியேல் தைரியமுடையவனாயிருந்தான்

தன்னிகரில்லா தானியேல், வேண்டிக் கொள்ளத் தொடங்கின போதே, கட்டளை பிறந்ததற்கான காரணங்களில் இரண்டாவது, அவன் தன் பக்தி வாழ்வில் அஞ்சா நெஞ்சனாக இருந்தான் என்பது.

பொதுவாக, தீர்மானம் என்பது வேறு, அதைச் செயல்படுத்துவ தென்பது வேறு. தீர்மானம் கிட்டத்தட்ட எல்லோராலும் எடுக்கமுடியும் தீர்மானம் எடுப்பதற்கு நல்ல நெஞ்சு போதும். ஆனால், அதைச் செயல்படுத்துவதற்கு நெஞ்சு உரமிடப்பட்டதாகவும், சூழ்நிலையை எதிர் கொள்ளும் தைரியமுடையதாகவும் இருக்க வேண்டும். நம்ம தானியேலிடத்தில் இதற்குக் குறைவே இல்லை. வாலிப முறுக்கிலே மாத்திரமல்ல தளர்ந்த வயதிலும் தைரியமுள்ளவனாகவே இருந்துள்ளான்.

ஆம், நேபுகாத் நேச்சார் தன் ராஜ்ய பாரத்தின் இரண்டாம் வருஷத்தில் அவன் கண்ட சிலை சொப்பனத்தின் அர்த்தம் ராஜாவுக்கும், அவன் ராஜ்யபாரத்துக்கும் எதிராக இருந்த நிலையிலும் இவன் எந்த பயமுமின்றி தைரியமாக **சொப்பனமானது நிச்சயம், அதின் அர்த்தம் சத்தியம்** என்றான் (2:45). அது போன்றே "தேசத்தின் எல்லை பரியந்தம் பரந்து, வானத்தின் எல்லை மட்டும் எட்டியிருந்த விருட்சம்" சம்மந்தமாக, ராஜா "**ஒரு மாட்டைப் போல புல்லைத் தின்னுவான்**" என்று சொல்ல வேண்டியதாக இருந்தாலும், அது பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்படாமல், தேவன் அர்த்தத்தை வெளிப்படுத்துகிறார் நான் சொல்லுகிறேன் என்ற அடிப்படையில் பேசினான் (தானி 4:25-37) உங்களாலும், என்னாலும் இப்படி, தேவன் வெளிப்படுத்திய வைகளுக்காகத் தைரியமாகச் செயல்படமுடியுமா? சொல்லுங்கள். இவன், அர்த்தம் சொன்னது மாத்திரமல்ல, "மனந்திரும்பினால் தப்பிக்க வாய்ப்புண்டு என்றும் கூறியுள்ளான் (தானி 4:27).

இன்னொரு சமயம், பெல்ஷாத்சார் ராஜா, தேவனுடைய ஆலயத்தின் மகிமையைக் கணக்கிலே எடுக்காமல், அங்கிருந்து எடுத்து வரப்பட்ட பொன், வெள்ளிப் பாத்திரங்களைக் கொண்டு தன் மனைவிகள் மற்றும் வைப்பாட்டிகளுடன் குடித்துக் கும்மாளமிடும் போது, சுவற்றில் தோன்றின எழுத்துக்கள் அவனைக் கலங்கப் பண்ணி, தொடை நடுங்க வைத்தது (தானி 5:1,5) அந்த எழுத்துக்களுக்கான அர்த்தம் சொல்ல ஆள் கிடைக்காமல் அலைமோதி, கடைசியில் ஒரு வழியாக தானியேல் அழைக்கப்பட்டான் (5:12) வெகுமானங்களைக் கொடுத்து தானியேலை **விலைக்கு வாங்கி விட்டால்** நல்ல அர்த்தம் கொடுப்பான் என்று எண்ணி முயற்சித்தான் ராஜா (5:17) தேவனுடைய வரத்தைப் பணத்தினால் பெற்றுக் கொள்ள விரும்பிய சீமோனை நோக்கி, "உன் பணம் உன்னோடே கூட நாசமாய்ப் போகக்கடவது"

(அப். 8:20) என்று சொன்ன பேதுரு போல், உன் பணம் உன்னோடே இருக்கட்டும் என்று சொன்னதோடு, உன் ராஜ்யத்துக்கு முடிவு வந்தது. **"நீ தராசிலே நிறுத்தப்பட்டு, குறை காணப்பட்டாய், உன் ராஜ்யம் பிரிக்கப்பட்டு மேதியருக்கும், பெர்சியருக்கும் கொடுக்கப்பட்டது"** என்றான் (5:25-28) இப்படியெல்லாம் சொல்லுவதற்கு எவ்வளவு நெஞ்சுரமும், தேவன் மீதும், அவருடைய வெளிப்பாடுகள் மீதும் அதீத பற்றும் வேண்டுமென்று உங்களுக்குத் தெரிகிறதா?.

அன்பானவர்களே, நாமெல்லாம் இக்காரியத்தில் எப்படி? தானியேல் போல் தைரியமுள்ளவர்களாய் இருக்கிறோமா? அல்லது பெல்ஷாத்சார் போன்று தொடை நடுங்கிகளாக உள்ளோமா? பெரும்பாலான நாம் பின்பற்றும் பாணி எப்படி? மற்றவன் முகங்கோணக்கூடாது, அடுத்தவன் மனது நோகக்கூடாது, யாரும் நம்மைத் தப்பாக நினைத்து விடக்கூடாது, நமக்கு ஏன் வம்பு, அவர்களாகவே தெரிந்து கொண்டு போகட்டும் என்று எப்படி யெல்லாமோ சிந்திக்கிறோம். ஆனால், நாம் இப்படியெல்லாம் சிந்திப்பதால், **தேவனுடைய மனது** பாடாய்ப்படுமே என்று கொஞ்சமாகிலும் கவலைப்படுகிறோமா?. தேவன் என்ன நம்ம பக்கத்து வீட்டிலே குடியிருக்கிறாரா? அல்லது ஊருக்குள்ளே தான் இருக்கிறாரா அல்லது அடிக்கடி தான் பார்க்கப் போகிறாரா கவலைப்படுவதற்கு என்கிறீர்களா? ஒருவேளை, உங்கள் எண்ணம் இப்படியாக இருந்தால், தப்புக் கணக்குப் போடுகிறீர்கள்!.

தேவன் ஆவியானவரைக் கொண்டு வெளிப்படுத்தியுள்ள அவருடைய வார்த்தைகளைப் பேசுவதற்கு நாம் யாரைக் கண்டும் பயப்படத் தேவையில்லை. சத்தியத்தைச் சத்தமாகவும், சுவிசேஷத்தைச் சுத்தமாகவும் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும் (1பேதுரு 4:11) நம்ம தானியேலின் மாதிரியைத்தான் அப்போஸ்தலர்களும் பின்பற்றினது போல் தெரிகிறது. மார்க்க ரீதியாக சர்வ அதிகாரம் கொண்ட ஆலோசனைச் சங்கத்துக்கு எதிராக தேவனுக்குப் பயப்படுவது நியாயமா? அல்லது உங்களுக்குப் பயப்படுவது நியாயமா என்று கேட்டுள்ளார்கள். புதிய ஏற்பாட்டின் கீழாக வாழும் நமக்குக் கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் தான் மாதிரி. போலிகளை நம்பி அவர்கள் பின்னாகப் போய், பதுங்கி வாழலாம் என்று எண்ணி நியாயந்தீர்ப்பில் மாட்டிக்கொள்ளாதீர்கள்.

மாறாக, தானியேல் போல நம்முடைய ஆன்மீக வாழ்வில் தைரியமுள்ளவர்களாயிருந்து, கிறிஸ்துவுக்காகவும், அவருடைய உபதேசத்துக்காகவும், சபைக்காகவும் வாழ்வோம்.

### தானியேல் ஜெப வீரனாயிருந்தான் :

தன்னிகரில்லா தானியேல் வேண்டிக் கொள்ளத் தொடங்கின போதே கட்டளை வெளிப்பட்டதற்கான காரணங்களில் மூன்றாவதாக, அவனுடைய ஜெப வாழ்க்கையை நாம் குறிப்பிட முடியும். ஜெபம் என்பது தேவனைப் பின்பற்ற விரும்பும் எல்லோருடைய வாழ்க்கையிலும் கிட்டத்தட்ட

இருக்கத்தான் செய்கிறது. ஆயினும் எல்லோருடைய வாழ்க்கையிலும் அது ஒரே விதமாக இருப்பதில்லை. வாழ்க்கையிலே ஜெபம் இருப்பதும் உண்டு. வாழ்க்கையே ஜெபமாக இருப்பதும் உண்டு. இந்தத் தானியேல், இரண்டாம் ரகத்தைச் சேர்ந்தவன். இவனைப் பொறுத்தளவில், ஜெபம் என்பது இலையில் வைக்கப்படும் ஊறுகாய் அல்ல. தேவைப்பட்டால் தொட்டுக் கொள்வதற்கு. மாறாக, இலையில் போடப்படும் சோறு போன்றது. வயிறாரச் சாப்பிடுவது போல, மனமார ஜெபிப்பது. வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் இப்படி ஜெபித்துத்தான். தானியேல் வேண்டிக் கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை பெற்றுள்ளான்.

நேபுகாத்நேச்சார், முதல் முறை சொப்பனங் கண்டபோது, அர்த்தம் சொல்ல விக்கிரக ஞானிகளால் கூடாத போது, ராஜா மகா கோபமும் உக்கிரமுங் கொண்டு, பாபிலோனில் இருக்கிற எல்லா ஞானிகளையும் கொலை செய்யும்படி கட்டளையிட்டான். அப்பொழுது, தானியேலும் அவன் தோழரும் கூட தேடப்பட்டார்கள் (2:12,13) இதையறிந்த தானியேல் தலையாரிகளுக்கு அதிபதியாகிய ஆரியோகோடே புத்தியாய்ப் பேசி, **ஜெபத்திலே முழு நம்பிக்கை கொண்டவனாய்த் தவணை வாங்கினான்** (2:14,15) பின்பு வேகமாக வீட்டுக்குப் போய், தன் தோழரோடு சேர்ந்து ஜெபித்தான். அப்பொழுது, இராக்காலத்திலே **மறைபொருள்** அவனுக்கு வெளிப் படுத்தப்பட்டது (2:19) வெளிப்பாட்டைப் பெற்றுக்கொண்டவுடன் அரமனையை நோக்கி தலை தெறிக்க ஓடவில்லை அவன். நாமாக இருந்தால், அப்படித்தான் செய்திருப்போம் ராஜாவின் பாராட்டைப் பெற. ஆனால், இந்தத் தானியேல், தேவனை **ஸ்தோத்தரித்துப்** பிறகு, ஆரியோகிடம் போய், "ராஜாவுக்கு முன் செல்ல தான் தயார்" என்று சொன்னான். இங்கே, இன்னொன்றையும் நாம் கவனிக்கத் தவறிவிடக்கூடாது. தானியேல், தனி ஜெபத்திலே மாத்திரமல்ல, கூட்டு ஜெபத்திலும் நம்பிக்கையுடையவனாகவே இருந்துள்ளான்.

பிறகு, தரியு ராஜாவின் நாட்களில், தானியேலை, அவனுடைய தேவனைப் பற்றிய வேத விஷயத்திலே குற்றப்படுத்தும் சதி தீட்டப்பட்டு, முப்பது நாளளவும் ராஜாவைத் தவிர வேறு யாரையும் சேவிக்கக் கூடாது என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டு அதற்கு ராஜா கையெழுத்தும் வைத்தான். கட்டளையை மீறுபவர்களுக்குத் தண்டனை, "சிங்கங்களின் கெபி" அப்பொழுது, தானியேல் என்ன செய்தான்? "தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்த போதிலும், தன் வீட்டுக்குள்ளே போய், **தன் மேல் அறையிலே**, எருசலேமுக்கு நேராகப் **பலகணிகள் திறந்திருக்க, அங்கே, தான் முன் செய்து வந்தபடியே தினம் மூன்று வேளையும், தன் தேவனுக்கு முன்பாக முழங்கால் படியிட்டு, ஜெபம் பணணி ஸ்தோத்திரமும் செலுத்தினான்**" (தானி 6:10) ஜெபத்திலே எவ்வளவு பிடிப்பு, தேவன் மீது எவ்வளவு வைராக்கியம் பாருங்கள்!.

அடுத்து, எழுபது வாரங்கள் சம்பந்தமான தரிசனத்தைப் பெற்றுக்கொண்ட போது, தானியேல் ஏறெடுத்த ஜெபம் மிகவும் அற்புதமானது (9:4-19) இங்கே, தானியேல் எருசலேமின் பாழ்க்கடிப்புகள் நிறைவேறித்தீர எழுபது வருஷம் செல்லுமென்று புத்தகங்களால் அறிந்து கொண்டு உபவாசம் பண்ணி, இரட்டிலும், சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை **ஜெபத்தினாலும், விண்ணப்பங்களினாலும் தேடினான்** (9:1-2) இந்த ஜெபத்திற்குத் தான், "நீ எனக்குப் பிரியமானவன்" என்ற பதிலும், "நீ வேண்டிக் கொள்ளத் தொடங்கின போதே கட்டளை வெளிப்பட்டது என்ற அறிவிப்பும் வந்தது".

இதை வாசிக்கும் அருமையானவர்களே, இந்தத் தானியேல் எப்பொழுதெல்லாம் ஜெபித்துள்ளான், எப்படியெல்லாம் ஜெபித்துள்ளான் என பாருங்கள்! இன்றைய நாட்களில் நம்முடைய ஜெப வாழ்க்கை எப்படியுள்ளது? தானியேல் உபவாசமிருந்து ஜெபித்தான். ஆனால், தன் உபவாசத்தை "வால்போஸ்ட்" அடித்து விளம்பரப்படுத்தி ஜெபிக்கவில்லை. இரட்டிலும், சாம்பலிலும் உட்கார்ந்து ஜெபித்தான். கோட்டு, சூட்டு அணிந்து போஸ் கொடுத்து ஜெபிக்கவில்லை. காரியம் நிறைவேற வேண்டுமென்று ஜெபித்தான். பாக்கெட் நிறைய வேண்டுமென்று ஜெபிக்கவில்லை. என்னடா, இப்படிச் சொல்லுகிறேன் என்று நினைக்கிறீர்களா? என்ன செய்வது, யதார்த்த நிலை அப்படித்தானே உள்ளது.

தானியேலைப் போல, நம்முடைய ஜெபமும் கேட்கப்பட வேண்டுமானால், இந்தப் பசப்பு பாணி ஆகவே ஆகாது. இயேசுவின் ஜெபம் கேட்கப்பட்டதென்று எபிரெயர் ஆசிரியர் கூறி, ஏன் கேட்கப்பட்ட தென்பதற்கான விளக்கமும் கொடுக்கிறார் கவனியுங்கள். "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமை யுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும், விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து **தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார்**" (எபி. 5:7). ஜெபம் எப்பொழுது கேட்கப்படுகிறதென்றும், எப்பொழுது பதில் கிடைக்கிறதென்றும் தயவு செய்து தெரிந்து கொள்ளுங்கள். அர்த்தமில்லாமல் ஜெபித்து நாட்களை வீணடிப்பதோடு, வாழ்க்கையையும் வீணடித்து, நித்திய வாழ்வையும் இழந்து விடக்கூடாது.

ஆகையால், அன்பானவர்களே நாம் ஒவ்வொருவரும் தானியேல் எப்படி தேவனுக்குப் பிரியமாயிருந்தான் என்பதைப் புரிந்து, அவனைப் போல் பக்தி வாழ்வுக்கான தீர்மானம் எடுத்து, ஊக்கமாய் ஜெபித்து தைரியமாய் வாழ்ந்து, தேவனிடத்திலிருந்து நம் விண்ணப்பங்களுக்கான பதிலைப் பெற்று ஆசீர்வாதமாய் வாழ்வோமாக!. ஆமென்.

**S. ராஜநாயகம்**

ஜெபியுங்கள் ! திட்டமிடுங்கள்! பங்கு பெறுங்கள் !!

காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்

எக்லீசியா வேதாகமக் கல்லூரியும்

இணைந்து நடத்தும்

# ஒன்பதாம் வேதாகம கருத்தரங்கம்

# NINTH ANNUAL BIBLE LECTURESHIP

நாள் : **அக்டோபர் 2,3 - 2006**
**(திங்கள், செவ்வாய் ஒரு நாள் அரசு விடுமுறை)**

நேரம் : **திங்கள் காலை 9.00 - மாலை 5.00 மணி வரை**

**செவ்வாய் காலை 9.00 - மதியம் 1.30 மணி வரை**

இடம் : **கிறிஸ்துவின் சபை வளாகம்**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

பேச்சாளர்கள் : **தெரிந்தெடுக்கப்பட்ட தேவதாசர்கள்**

- வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.
- தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடவசதி உண்டு.

தொடர்பு முகவரி

## கிறிஸ்துவின் சபை

195, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
PH. : 04257 - 230030, 230603 Cell : 98427 - 30382

# நீங்கள் கிறிஸ்தவன் என்ற பெயரில் மட்டும் இருக்க முடியுமா?

மார்க்க ரீதியாக பிளவுபட்ட உலகில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். நூற்றுக்கணக்கான சபைகளும் ஆயிரக்கணக்கான நாமங்களும், பட்டங்களும் வழங்கி வருகின்றன. இது கிறிஸ்துவினிமித்தம் உதவியாயிருப்பதற்குப் பதிலாக, அதிகப்பட்சமானோர் மீது எதிர்பாராத ஆபத்தை ஏற்படுத்தியிருக்கிறது. மக்களிடையே பொதுவான குழப்பங்களும் தங்கள் பக்தியையே முழுமையாக விட்டு விட ஏதுவான சோர்வும் காணுகிறது. ஆனால், இதுதான் நிவாரணமா? நிச்சயமாக அப்படியில்லை வேறு சிறந்த வழி இருக்கத்தான் செய்கிறது.

வெறும் கிறிஸ்தவன் என்ற பெயரில் மாத்திரம் நீங்கள் அழைக்கப்பட முடியும் என்பதை அறிவீர்களா? அது சரி. உண்மையில் நீங்களானாலும், வேறு யாரானாலும், கிறிஸ்தவராக கிறிஸ்தவன் என்று மட்டும் பெயர் பெற்றவராக இருக்க இயலும். கிறிஸ்துவின் நாமத்தை மாத்திரம் உங்களால் தரித்துக் கொள்ள இயலும்போது, மனிதனின் பெயர்களையும், பட்டங்களையும், நீங்கள் ஏன் தரித்துக் கொள்ள வேண்டும்? வேதம் உங்களை கிறிஸ்தவனாக மட்டுமே மாற்றும்.

புதிய ஏற்பாட்டு மக்கள் கிறிஸ்தவர்களாக மாத்திரமே இருந்தனர். உதாரணமாக **அந்தியோகியாவிலே சீஷர்கள் முதன் முதலில் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்பட்டனர்** .(அப். 11:26) இன்று நமது நாளில் இதற்கொப்பான எப்படிப்பட்ட கிறிஸ்தவர்களாக இருக்ககூடும்? மறுபடியும் பவுல் அகிரிப்பா ராஜாவினிடத்திலே பிரசங்கிக்கும் போது, என்னை "**நீ கொஞ்சங்குறைய கிறிஸ்தவனாக சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்று ராஜா சொன்னதாக வாசிக்கிறோம்**". (அப். 26:28) கர்த்தருடைய உபதேசத்திற்கு கீழ்ப்படிந்தால்தான் கிறிஸ்தவனாக முடியும் என்று அவனுக்கு எப்படி தெரிந்திருந்தது. மற்றவர்களை கிறிஸ்தவனாக மாற்றியது எதுவென அவன் அறிந்திருக்கக் கூடும், அல்லது அவனுக்கு குறிப்பாகப் போதிக்கப்பட்டிருக்க வேண்டும். எப்படி எடுத்துக்கொண்டாலும், தான் கிறிஸ்தவனாக மாற, கிறிஸ்துவுக்குக் கீழ்படிய வேண்டும் என்பதை அவன் அறிந்திருந்தான். இறுதியாக பேதுரு எழுதும்போது ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதனிமித்தம் தேவனை மகிமைப் படுத்தக்கடவன். (1 பேதுரு. 4:16). மற்றொரு மொழி பெயர்ப்பில் **இந்த நாமத்தினாலே** அல்லது **கிறிஸ்தவன்** என்ற நாமத்தினாலே தேவனை மகிமைப்படுத்தக்கடவன் என்று சொல்லப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டில் மூன்று இடங்களில் கிறிஸ்தவன் என்ற பதம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறையும் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்த ஒரு தனிப்பட்டவனையோ, தனிப்பட்டவர்களையோ குறிப்பதாக அமைந்துள்ளது, அல்லது ஒருவன் கிறிஸ்தவனாக மாற கர்த்தருக்குக் கீழ்ப் படிதலைக் குறிக்கிறது. கிறிஸ்தவன் என்னும் பதத்திற்கு கிறிஸ்துவைப் போலிருத்தல் அல்லது கிறிஸ்துவின் ஆவியை உடையவனாயிருத்தல் என்று பொருள், ஒருவன் எப்படி கர்த்தருக்கு கீழ்ப்படியாமலேயே அவருடைய நாமத்தைத் தரித்துக் கொள்ளாமல், மனிதனால் உண்டாக்கப்பட்ட பெயரை வைத்துக் கொண்டு எப்படி கிறிஸ்துவைப்போல் இருக்க முடியும்? நிச்சயமாக அது முடியாதது.

பெயரில் (நாமத்தில்) ஒன்றுமில்லை என்று சிலர் கூறக்கூடும். ஆகிலும் கிறிஸ்துவின் நாமத்தில் மட்டுமே இரட்சிப்பு இருக்கிறது என்று வசனம் சொல்லுகிறது. (அப். 4:12) அதே வேளையில் வேறு எந்த நாமத்திலும் இரட்சிப்பு இல்லை. 1 கொரி. 1-ம் அதிகாரத்தில் கொரிந்து பட்டணத்தில் இருந்த சில அங்கத்தினர்கள் தங்களைப் பவுலைச் சார்ந்தவனென்றும், அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் கேபாவை சேர்ந்தவனென்றும், கிறிஸ்துவை சேர்ந்தவனென்றும் கூறிப் பிரிந்திருந்தனர். பவுல் இதைக்குறித்து அவர்களைப் புகழாமல் அவர்களை கண்டனம் பண்ணுகிறார். **சகோதரரே நீங்களெல்லாரும் ஒரே காரியத்தை பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.** (1 கொரி. 1:10), என்று கூறினார். பிறகு அவர்கள் அறிவீனத்தை சுட்டிக்காட்டும் பொருட்டு, **கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காக சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என்று கேட்கிறார்.** (1கொரி. 1:13) கிறிஸ்து ஒருவரே என்பதும், கிறிஸ்து அவர்களுக்காக சிலுவையிலறையப்பட்டார் என்பதையும், கிறிஸ்துவின் நாமத்தை மாத்திரமே தரித்துக்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறோம். அதுவே இன்றைக்கு உண்மையானது.

வேதத்தில் குறிப்பிடாத பெயர்களையோ, பட்டங்களையோ நீங்கள் தரித்துக் கொண்டிருந்தால், வேதத்தின் போதனைப்படி, நீங்கள் கிறிஸ்தவரல்ல. சிலபேர் விஷயத்தில், வேதத்திலிருந்து குறிப்பிடப்படுகின்ற பெயரையே தரித்துக் கொண்டிருப்பதாக கூறப்பட்டாலும், கர்த்தர் உங்களையோ, பிறரையோ தரித்துக்கொள்ளும்படி கூறப்படாத பெயராக அது இருப்பின், நீங்கள் தவறாக அந்த பெயரைத் தரித்து கொண்டிருக்கிறீர்கள் என்றுதான் பொருள். நீங்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று வேதம் கூறுவதற்கு அப்பால், (இன்ன சபைக்கிறிஸ்துவன் என்று) **கிறிஸ்தவன்** என்பதற்கு முன்னோ பின்னோ பயன்படுத்துகிற படியால், கர்த்தருடைய நாமத்தை நீங்கள் வீணாகப் பயன்படுத்து கிறபடியால், நீங்கள் கிறிஸ்தவனாக இருக்க முடியாது. ஏதோ ஒரு குழுவைச்

சார்ந்த கிறிஸ்தவனாக இருந்து கொண்டு, வேதத்தின்படியான கிறிஸ்தவனாக நீங்கள் இருக்க முடியாது. ஒன்று நீங்கள் வேதத்தின்படியான கிறிஸ்தவனாக இருக்க வேண்டும். அல்லது கிறிஸ்தவனாகவே இல்லாதிருக்க வேண்டும். வேதத்தை முறையாக வாசித்து, கற்றறிந்து, அது என்ன சொல்லுகிறதோ அதை மாத்திரம் செய்யும்படி உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் அப்படிச் செய்வீர்களானால், நீங்கள் எப்படிப்பட்ட கிறிஸ்தவனாக இருக்க முடியும் என்பதையும் கிறிஸ்தவன் என்ற பதத்திற்கு அப்பால், கூட்டியோ குறைத்தோ பெயர் தரிக்காமல் கிறிஸ்தவன் என்று மாத்திரம் பெயர் தரித்துக்கொள்வீர்கள். அதுபோதுமானதல்லவா? கிறிஸ்தவன் என்னும் பதத்திற்கு அப்பால் கூட்டியோ, குறைத்தோ ஏன் இருக்க வேண்டும்?. நீங்கள் கர்த்தரைக் குறித்து கேள்விப்பட்டு, (ரோமர். 10:17) தேவனை விசுவாசித்து, (எபி. 11:6), உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி (அப். 17:30) கிறிஸ்துவை அறிக்கையிட்டு (மத். 10:32) பாவ மன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும். (அப். 2:38; மாற்கு. 16:16) அப்பொழுது கர்த்தர் உங்களை இரட்சிப்பார், நீங்கள் வேதத்தில் வாசிக்கிற ஒரே ஒரு சபையில் உங்களை அங்கமாக்குகிறது (அப். 2:47; மத். 16:18; ரோமர் 16:16).

கிறிஸ்துவின் சபையில் அங்கமாயிருப்பீர்களானால், நீங்கள் கிறிஸ்தவன் என்று மாத்திரம் அழைக்கப்படுவீர்களானால், நீங்கள் சரியான பாதையில் செல்கிறீர்கள் என்று பொருள்படும். அப்பொழுது நீங்கள் கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொண்டு இருக்கிறீர்கள் என்றும், கிறிஸ்துவின் சபையில் அங்கமாயிருக்கிறீர்கள் என்றும் பெருமையுடன் உறுதியாகச் சொல்லிக் கொள்ள இயலும். இதன் பொருள், நீங்கள் நாமகரணக் கூட்டத்தைச் சார்ந்தவரல்ல, மனிதனுடைய உபதேசங்களை நீங்கள் பின்பற்றுபவர்களல்ல, ஆனால், நீங்கள் தரித்துக் கொண்டிருக்கும் பெயரை வசன ஆதாரத்துடன் நிரூபித்துக் காட்டி, மார்க்கம் என்னும் பெயரில் நீங்கள் செயல்படும் அனைத்துக் காரியங்களும், அவரது சபையில் நீங்கள் அங்கமாயிருப்பதை பொருள்படச் செய்யும். அப்பொழுது பவுல் ஏன் இப்படி எழுதினார் என்பதை புரிந்து கொண்டு நீங்கள் சந்தோஷப்பட இயலும். பவுல் கூறியதாவது, **வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதை எல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்.** (கொலோ. 3:17).

**J.C. சோட்**

## ரோமரில் ஆபிரகாமின் விசுவாசம்

1. நம்பிக்கையுள்ள விசுவாசம் (5:18)
2. பலமுள்ள விசுவாசம் (5:19)
3. சந்தேகமில்லாத விசுவாசம் (5:20)
4. முழு நிச்சயமான விசுவாசம் (5:21)
5. வல்லவனாக்கின விசுவாசம் (5:21)

# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

*மாணவர் சேர்க்கை அறிவிப்பு*

## EKKLESIA BIBLE COLLEGE

P.O. Box-27, KANGAYAM - 638 701. India.

**STUDENTS ADMISSION NOTIFICATION**

**பு**திய ஏற்பாட்டு உபதேசத்தில் முழு நம்பிக்கையும், கிறிஸ்துவின் நற்செய்தியை நானிலம் எங்கும் எடுத்துச் சொல்லவேண்டுமென்பதில் இணையில்லா ஈடுபாடும் கொண்ட **வாலிபர்களிடமிருந்து** விண்ணப்பங்கள் உடனடியாக வரவேற்கப்படுகின்றன. **திருமணமாகி 35 வயதைத் தாண்டாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.**

**காலம்** : **3 வருடம்** (செமஸ்டர் முறை)

**Duration** : **3 Years** (Semester System)

**கல்வித்தகுதி** : **+2 தேர்ச்சி** (அல்லது) **பட்டப்படிப்பு**

**Qualification** : **+2 Pass (or) Any Degree**

**பட்டம்** : **வேதயியலில் இளங்கலை பட்டம்**

**Degree** : **B.B.S.** (Bachelor of Biblical Studies)

**தகுதியுள்ளவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்**

விபரங்கட்கும், விண்ணப்பங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

**இயக்குநர்**

எக்லீசியா வேதாகமக் கல்லூரி

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. இந்தியா

✆ 04257 - 230030, 230603 செல் : 98427 - 30382

பெண்கள் பகுதி

# சிப்பிராள், பூவாள்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே, இம்மாதமும் உங்களோடு சேர்ந்து தேவனுடைய வார்த்தைகளைப் படிப்பதற்கு கர்த்தர் கொடுத்த சிலாக்கியத்துக்காக அவருக்கு கோடான கோடி நன்றிகளை செலுத்துகிறேன்.

வேதாகமத்தில் பார்த்தால், ஆபிரகாம், யோசேப்பு, மோசே, தாவீது போன்றவர்கள் எப்போதும் நம் கண்களுக்கு முன்பாக நிற்பார்கள். பெண்களின் வரிசையில் எடுத்துக்கொண்டால், ரூத், ரெபெக்காள், எஸ்தர் போன்றவர்களை பரிசுத்த ஆவியானவர் பெயர் குறிப்பிட்டு அவர்களுடைய குணாதிசயங்களை நமக்கு பாடமாக கொடுத்திருக்கிறார்.

ஆனால், இன்றைக்கு ஒரு ஞாயிறு பள்ளி மாணவர்களைப் பார்த்து, யாத்திராகமம் முதலாம் அதிகாரத்தில் இடம் பெற்றிருக்கும் சிப்பிராள், பூவாள் இவர்களைப் பற்றி கேட்டால் நிச்சயமாக அவர்களுக்கு அது ஒரு புதுமையான ஒன்றாகவே இருக்கும்.

சிப்பிராள், பூவாள் ஆகிய இருவர் பற்றி யாத்திராகமம் முதலாம் அதிகாரம் 15 முதல் 21 முடிய உள்ள வசனப் பகுதியில் பேசப்படுகிறது. இவர்கள் இருவரும் எபிரெய மருத்துவச்சிகள். இஸ்ரவேல் ஜனங்கள் பலுகி பெருகி எண்ணிக்கையில் அதிகமாகி, பலசாலிகளாயுமானார்கள். இதைப் பார்த்த பார்வோன் இவர்களை இப்படியே விட்டால், நமக்கு விரோதமாய் எழும்பி, நம் தேசத்தை விட்டே போய் விடுவார்கள் என்று கருதி அவர்களுக்கு ஒரு உபாயம் பண்ணினான். கடுமையான வேலைகளை அவர்களிடம் வாங்கினான். அத்தோடு நிறுத்தாமல் இந்த மருத்துவச்சிகளை அழைத்து, "நீங்கள் எபிரெய ஸ்திரிகளுக்கு மருத்துவம் செய்யும் போது அவர்கள் மனையின் மேல் உட்கார்ந்திருக்கையில் பார்த்து, ஆண் பிள்ளையானால் கொன்று போடுங்கள், பெண் பிள்ளையானால் உயிரோடிருக்கட்டும் என்றான்" (யாத். 1:16). ஆனால், மருத்துவச்சிகளோ **தேவனுக்குப் பயந்ததினால்,** எகிப்தின் ராஜா தங்களுக்கு இட்ட கட்டளைப்படி செய்யாமல் ஆண் பிள்ளைகளையும் உயிரோடே காப்பாற்றினார்கள்.

இதை அறிந்த ராஜா மருத்துவச்சிகளை அழைத்து, ஏன் ஆண்பிள்ளைகளை உயிரோடே விட்டு காப்பாற்றுகிறீர்கள்? என கேட்டான். அவனுக்கு முன்பாக மருத்துவச்சிகள் "**எபிரெய ஸ்திரீகள் எகிப்திய ஸ்திரீகளைப் போல் அல்ல, அவர்கள் நல்ல பலமுள்ளவர்கள். மருத்துவச்சி அவர்களிடத்துக்குப் போகுமுன்னமே அவர்கள் பிரசவித்தாகும்** என்றார்கள்.

இந்த சம்பவங்கள் மூலம் நாம் சிப்பிராள், பூவாள் பற்றி வேதத்தின் வாயிலாக தெரிந்து கொண்டோம். இந்த இரண்டு ஸ்தீரிகளிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள் இருக்கிறது. இராஜாவின் கட்டளைக்கு

கீழ்ப்படியாத செயலாக இது தோன்றினாலும் இம்மருத்துவச்சிகள் தவறான செயலைச் செய்ய தங்களை அனுமதிக்காமல், சரியானதைச் செய்ய தீர்மானித்தார்கள். அவர்களுக்கு எது சரி, எது தவறு என்று எப்படி தெரிந்தது? அவர்கள் **தேவனுக்குப் பயந்ததினால்**. காரியமே இங்குதான் இருக்கிறது ஒருவருக்கு தேவனுக்குப் பயப்படும் பயம் இருப்பின் எப்படியாவது சரியானதைச் செய்து விடவேண்டும், இல்லையென்றால் தவறு செய்யும் போது தேவன் தண்டித்து விடுவார் என்ற பயம் இருக்கும்.

பிறக்கும் எல்லா ஆண் குழந்தைகளையும் கொன்று போடுங்கள் என்ற கட்டளை எவ்வளவு கொடூரமானது. தேவன் மேல் இருந்த பயம் மருத்துவச்சிகள், இக்கொடிய செயலைச் செய்யவிடாமல் செய்தது. இதனால் பின்பு என்ன விளைவு இருக்கும் என்று எண்ணிப்பார்க்கவில்லை. தேவனுடைய பிள்ளைகளுக்கு விரோதமாக தங்கள் கைகளை நீட்டக்கூடாது என்று பயந்ததினால் எல்லா ஆண் குழந்தைகளையும் உயிரோடே காப்பாற்றினார்கள். ராஜாவின் கேள்விக்கு அவர்கள் பொய்யான பதிலை சொல்வதாகத் தெரிந்தாலும், எபிரெய ஸ்திரீகள் வேலை செய்து, வேலை செய்து பலசாலிகளாக இருந்ததினால் மருத்துவச்சிகள் போகுமுன்னே பிள்ளை பெற்றுக் கொண்டிருக்கவும் வாய்ப்புள்ளது. அத்தோடு மட்டுமல்லாமல், ஒரு தாதியின் வேலை உயிரை காப்பாற்றுவது தான். உயிரைக் கொல்லுவதற்கு அவர்கள் மருத்துவச்சிகளாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நன்மை என்று தெரிந்தால் அதை முழு பலத்தோடே செய்து விடவேண்டும். அந்த அடிப்படையில் தான் இவர்கள் செயல் பட்டிருக்கிறார்கள். சரியானதைச் செய்கிறோமா என்று தான் தேவன் பார்க்கிறார். துன்மார்க்க அரசனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும் தேவன் பிரியப்படும் சரியான காரியத்தைச் செய்ய வேண்டுவது அவசியம் என்று இவர்கள் தீர்மானித்தார்கள்.

இதே போன்ற சம்பவம் யோசுவா இரண்டாம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. தேசத்தை வேவு பார்க்கச் சென்ற இரண்டு பேரை ராகாப் வேசி தன் வீட்டில் வைத்து காப்பாற்றிய சம்பவம் நாம் அனைவரும் அறிந்ததே. இவளைப் பற்றி கூறும்போது யோசுவா 2:11ல் "**உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும், கீழே பூமியிலும் தேவனானவர்**" என்ற அறிக்கையை இந்த ராகாப் செய்கிறாள். இவள் ஒரு வேசியாய் இருந்தாலும், தேவன் யார் என்பதை அறிந்து வைத்திருந்ததினால் அவருடைய பிள்ளைகளை காப்பாற்றுவதில் தவறேதும் இல்லை என்று நம்பி, இவ்வேவுக்காரரை ஒழித்து வைத்து காப்பாற்றியதால் **கீழ்ப்படியாத வர்களோடு கூட சேதமாகாதிருந்தாள்** (எபி.11:31). தேவனுக்காக காரியம் ஆற்றினாள். இதை வைத்து தேவனால் நியாயப்படுத்தப்பட்டாள் இந்த ராகாப்.

ஆனால், இன்றைக்கு வாழும் இந்த நாட்களில் தேவன் கொடுத்திருக்கும் சட்டம் அதாவது, புதிய ஏற்பாட்டின் உபதேசம் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதை வைத்து தான் நம்மை நியாயந்தீர்ப்பார். **அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார்,**

**இப்பொழுதோ, மனந்திரும்ப வேண்டுமென்று, எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லோருக்கும் விளங்கப் பண்ணினார் என்றான்** (அப். 17:30,31).

அடுத்து, இந்த ஸ்திரீகள் தங்கள் நற்கிரியையினால் பெற்ற ஆசீர்வாதங்களைப் பார்க்கிறோம். அன்றைக்கும், இன்றைக்கும், என்றைக்கும் நம் தேவன் நம் கிரியைக்குத் தக்க பலனை கொடுக்கிறவராகவே இருக்கிறார். நம் தேவன் எவ்வளவு நல்ல தேவன் என்று பாருங்கள்!. சிப்பிராள், பூவாள் இவர்களுடைய இருதயத்தை பார்த்த தேவன் பலனை அளிக்கிறார். **மருத்துவச்சிகள் தேவனுக்குப் பயந்ததினால், அவர்களுடைய குடும்பங்கள் தழைக்கும்படி செய்தார்** (யாத். 1:21). நல்ல கணவன் பிள்ளைகளோடு கூடிய ஆசீர்வாதமான வாழ்க்கையை பெற்று வாழ்ந்திருப்பார்கள். அவர்களுடைய வாழ்க்கைக்கான அனைத்து ஆசீர்வாதங்களையும் தேவன் கொடுத்திருப்பார். தேவன் தழைக்கும்படி செய்தார் என்றால் அந்த ஆசீர்வாதமே தனிதான். அதை எண்ணிப் பார்க்கவோ, அளந்து பார்க்கவோ நம்மால் முடியாது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளுக்குப் பயந்து வாழவேண்டும்.

மேலும், இந்த சம்பவத்தின் மூலம் நாம் கற்றுக்கொள்ளக்கூடிய மற்றுமோர் பாடம், கஷ்டமான நேரங்களில் தேவன் தன் பிள்ளைகளை எப்படியாவது, யாரைக் கொண்டாவது காப்பாற்றுகிறார். புதிய ஏற்பாட்டில், முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களை அடக்க, ஒடுக்க எத்தனை இடர்பாடுகள் வந்திருந்தும் அதனால் சுவிசேஷம் தடைபட்டு போகாமல் உலகெங்கும் பரவிற்று. நாளுக்கு நாள் கிறிஸ்தவர்கள் எண்ணிக்கையில் அதிகரித்துக் கொண்டேயிருந்தார்கள். **அன்றியும், கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.** (2தீமோ. 3:12) என்று பார்க்கிறோம். ஆனாலும், நாம் அவருடைய கற்பனைகளை கைக்கொள்ளும்போது. **நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை** (எபி. 13:6) என்று சொல்லியிருக்கிறார்.

எனவே அருமையான சகோதரிகளே! இச்சம்பவத்தின் மூலம் நிச்சயமாக தேவன் நமக்கு நல்ல பாடத்தை கொடுத்திருக்கிறார் என்று நம்புகிறேன். சிப்பிராள், பூவாளைப் போல தேவனுக்குப் பயந்து, நல்ல காரியம் செய்ய நம்மை அர்ப்பணிப்போம். அப்பொழுது அவர் நம்மையும், நம் பிள்ளைகளையும், குடும்பத்தையும், நாம் சார்ந்திருக்கும் கிறிஸ்துவின் சபையையும் தழைக்கும்படி செய்வார்! ஆமென்!!.

**ரேச்சல்நாயகம்**

வாலிபர் பகுதி

# நாம் தேவனுடைய வேலைக்காரர்களாயிருக்கிறோம்

பிரியமான வாலிப நெஞ்சங்களே! உங்கள் யாவரையும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். புதிய ஏற்பாட்டில் ஒரு கிறிஸ்தவனுக்கும், கிறிஸ்துவுக்கும் உள்ள உறவானது ஒரு எஜமானுக்கும் அடிமைக்கும் இடையே உள்ள உறவாக உருவகமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. பவுல் பெரும்பாலும் தன்னை கிறிஸ்துவின் ஊழியக்காரன் அல்லது அடிமையென்று காட்டுகிறார். (ரோமர் 1:1; கலாத்தியர் 1:10) வாலிபர்களாகிய நாம் சிலர் முழுநேர ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிறோம். சிலர் உலகப்பிரகாரமான வேலை செய்து கொண்டு ஊழியம் செய்கிறோம், இன்னும் ஒரு சிலர் கிறிஸ்துவின் சபையில் விசுவாசிகளாயிருக்கிறோம் எப்படியாயினும் வாலிபர்களாகிய நாம் தேவனுடைய வேலைக்காரர்களாக இருக்கிறோம். "உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்று இயேசு தம்முடைய சீஷர்களுக்கு மாத்திரம் கட்டளை கொடுக்கவில்லை அந்த கட்டளை எல்லா கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும். அதிலும் குறிப்பாக இந்த காரியத்தில் வாலிபர்களின் பங்கு அதிகமாக இருக்கிறது. இப்படி நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஆத்துமாக்களை ஆதாயம் செய்யாவிட்டால் நாம் வெறுங்கையோடு கர்த்தரை சந்திக்க வேண்டியிருக்கும். இந்த உலகத்தில் எத்தனையோ வாலிபர்கள் தவறான பழக்கவழக்கங்களினால் அழிந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆத்துமாவில் மரித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைப் பற்றி நாம் ஆத்துமபாரம் உடையவர்களாயிருக்க வேண்டும். அவர்களை நாம் தேவனிடத்தில் திருப்பும்போது தேவன் அதில் பிரியமாயிருப்பார், அதற்கான ஆசீர்வாதங்களை நமக்குத் தந்திடுவார். நாம் நம்முடைய எஜமானாகிய கிறிஸ்துவின் அடிமைகளாயிருக்கிறோம். பழங்காலத்தில் அடிமைகள் தங்கள் எஜமான்களுடைய பெயரால் குறிக்கப்பட்டார்கள். அவர்கள் எந்த எஜமானுடையவர்கள் என்பதை அடையாளம் காட்டுவதற்காக அப்படி முத்திரையிடப்படுவார்கள்.

ஆனால், நாம் கிறிஸ்துவுக்கு அடிமைகளாயிருப்பது வற்புறுத்தலினாலோ அல்லது கட்டாயத்தினாலோ அல்ல, நாம் மனப்பூர்வமாய் இயேசுவை நம்முடைய எஜமானாக ஏற்றுக்கொள்வதாகும். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமக்கிறிஸ்தவர்களுக்குச் சொல்லும் போது மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும் எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? என்று கேட்கிறார் (ரோமர் 6:16). **இயேசு ஒரு போதும் தம்மை பின்பற்ற வேண்டும் என்று யாரையும் வற்புறுத்துவதில்லை.** அதைப்பற்றி இயேசு சொல்லும்

போது "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் என்று சொன்னார். (மத்தேயு 16:24). மேலும் இயேசு (யோவான் 8:34ல்) சொல்லும்போது பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையா யிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். வாலிபர்களாகிய நாம் தேவனுக்கு அடிமைகளா யிருப்பதால் நல்ல அடிமைகளாக எப்படி இருப்பது என்பதை கற்றுக் கொள்ள வேண்டும். அதாவது, நல்ல வேலையாட்களாக எப்படி இருப்பது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால், நல்ல வேலையாட்களே பலனளிக்கப்படுவார்கள். சரி, புதிய ஏற்பாடு நல்ல வேலையாட்களாக எப்படி இருப்பது என்பது பற்றி என்ன கூறுகிறது?.

**I ஒரு நல்ல வேலைக்காரன் கீழ்ப்படிகிறவனாக இருக்கிறான்**

இது தான் ஒரு நல்ல வேலைக்காரனின் முதன்மையான கடமையாகும். கிறிஸ்துவின் ஒரு நல்ல வேலைக்காரன் வேலைக்காரனாவதற்கு அவசியப்படும் முதன்மையான நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிகிறவனாக இருக்க வேண்டும். பவுல் ரோமக்கிறிஸ்தவர்களுக்கு சொல்லும்போது "முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும் இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம், பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்கள்" (ரோமர் 6:17,18). பேதுரு இதை சத்தியத்திற்குக் கீழ்ப்படிகிறதாகச் சொல்கிறார் (1பேதுரு 1:22,23). நம்முடைய அருமை இரட்சகர் இந்த பூமியில் வாழ்ந்த நாட்களில் பிதாவுக்கு எல்லாவிதத்திலும் கீழ்ப்படிந்தார். அவர் தேவனுடைய குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார். மேலும் ஒரு நல்ல வேலைக்காரன் தன்னுடைய எஜமானுடைய எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிகிறான். எனவே கிறிஸ்துவின் நல்ல வேலைக்காரர்கள் சபை கூடிவருதலை விட்டு விடக்கூடாது என்ற கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார்கள் (எபிரெயர் 10:25); வாரத்தின் முதல் நாள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறவேண்டும் (அப். 20:7); வாரத்தின் முதல் நாள் தன் மனதில் நியமித்தபடியே கர்த்தருக்குக் கொடுக்க வேண்டும் (1 கொரி. 16:1,2; II கொரி. 9:7) அதுமாத்திரமல்ல, முழு உலகத்திற்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்ற கட்டளைக்கும் கீழ்ப்படிய வேண்டும் (மத்தேயு 28:19,20; மாற்கு 16:15,16) மேற்கூறிய காரியங்களை நாம் செய்யாமல் எப்படி அவருடைய வேலைக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ள முடியும்?.

**II ஒரு நல்ல வேலைக்காரன் ஜாக்கிரதையுள்ளவனாக இருக்கிறான்**

ஒரு நல்ல வேலைக்காரன் தன்னுடைய எஜமானுடைய சித்தம் அல்லது விருப்பம் என்ன என்பதை அறிந்து கொள்ள ஆசையாயிருக்கிறான். இந்த காரணத்திற்காக அவன் வேதாகமத்தின் நல்ல மாணவனாயிருக்கிறான். பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லும்போது, நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும்,

சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு என்று அறிவுறுத்துகிறார். (2தீமோ. 2:15). ஒரு நல்ல வேலைக்காரன் அவருடைய சேவையில் ஜாக்கிரதையுள்ளவனாக இருக்கிறான். ரோமர் 12:11ல் நாம் வாசிக்கும் போது அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள் என்று பவுல் சொல்கிறார். நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதை மிக அவசியமனதாகும் (எபிரெயர் 4:1,11). சோம்பேறியான வேலைக்காரர்கள் புறம்பான இருளில் தள்ளப்படுவார்கள் (மத்தேயு 25:26,30). நம்முடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பேதுரு சொல்லும் போது, ஆகையால் சகோதரரே, உங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதி யாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் (மேற்கூறப்பட்ட கிருபைகளை) நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை (II பேதுரு 1:10) என்கிறார்.

### III ஒரு நல்ல ஊழியக்காரன் தாழ்மையுள்ளவனாயிருக்கிறான்

பவுல் காலத்திய கிறிஸ்தவர்களுக்கு சொல்லும்போது அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள் என்று புத்திமதி சொன்னார். (கலா. 5:13). உண்மையான மேன்மைக்கு இதுதான் கர்த்தருடைய சூத்திரமாக இருக்கிறது. உங்களில் எவனாகிலும் முதன்மையான வனாயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன் என்று (மத்தேயு 20:27)ல் சொல்லியுள்ளார். அதனுடைய அர்த்தம் என்ன? ஒருவருடைய தீர்ப்புக்கு மற்றொருவர் மரியாதையுடன் அடிபணிவதாகும். முதன்மையான கனத்தை நாம் மற்றவர்களுக்கு கொடுத்து காரியங்களை நடப்பிக்க வேண்டும். 1 பேதுரு 5:5ல் பேதுரு சொல்லும் போது "ஒருவருக் கொருவர் கீழ்ப்படிந்து மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர் களுக்கோ கிருபை அளிக்கிறார் என்று சொல்கிறார். இயேசு கிறிஸ்து தாழ்மையின் உச்சக்கட்டத்திற்கே சென்று விட்டார். அவர் சீஷர்களின் கால்களைக் கழுவி தாழ்மையைக் கற்றுக் கொடுத்தார். எனவே கிறிஸ்துவின் சேவையில் தாழ்மையின் வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு கிறிஸ்துவுக்கும் சக மனுஷர்களுக்கும் நாம் சேவை செய்ய வேண்டும். ஆனால், தேவன் நமக்கு அந்த தாழ்மையின் வஸ்திரத்தை கனத்தின் வஸ்திரமாக மாற்றித் தருவார்.

### IV ஒரு நல்ல ஊழியக்காரன் தைரியமுள்ளவனாயிருக்கிறான்

மோசே நாற்பது வருடங்களாக தேவனுடைய வேலைக்காரனாக இருந்த பிறகு, அதாவது, மோசேயின் மரணத்திற்குப் பிறகு தேவன் அந்த இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தும்படி யோசுவாவைத் தெரிந்துகொண்டு பலங்கொண்டு திடமனதாயிரு என்று சொல்லி தேவன் யோசுவாவைத் தைரியப்படுத்தினார் (யோசுவா 1:6). மேலும், பேதுரு கிறிஸ்தவர்களை தங்கள் விசுவாசத்தோடு தைரியத்தை கூட்டி வழங்குங்கள் என்று புத்திமதி சொல்கிறார் (II பேதுரு 1:5). பேதுருவும், யோவானும் இயேசுவின்

நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசவும், போதிக்கவும் கூடாதென்று கட்டளையிடப்பட்டார்கள். ஆனால், அதற்குப் பேதுருவும், யோவானும் பயப்படாமல் இயேசுவின் நாமத்தைக் குறித்து தைரியமாய்ப் பேசினார்கள். ஒரு இராணுவ வீரன் எப்படி தன்னுடைய தளபதியின் கட்டளையின்படி செயல்படுவானோ அதுபோல நாம் நம்முடைய தளபதியாகிய கிறிஸ்துவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அப்படி செய்ய அந்த வீரனுக்கு எப்படி துணிச்சலும், தைரியமும் தேவைப்படுகிறதோ அதே போல நமக்கும் அந்த துணிச்சலும், தைரியமும் தேவை.

**V ஒரு நல்ல வேலைக்காரன் தன் எஜமானுக்கு தன்னை அர்ப்பணிக்கிறவனாக இருக்கிறான்**

பழங்கால இஸ்ரவேல் தேசத்தில் வேலைக்காரன் ஒருவன் தன்னுடைய எஜமானை விட்டுப் பிரிய மனதில்லாதிருந்தால் அவனுடைய சரீரத்தில் நிரந்தரமாக குறி அல்லது அடையாளம் போடப்படும். (யாத். 21:1-6). தன்னுடைய சரீரத்தில் எஜமானுடைய அடையாளத்தைத் தரித்துக் கொள்ளுகிறான். அப்போஸ்தலனாகிய பவுல் தான் கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை தன்னுடைய சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறதாகச் சொல்கிறார். (கலாத்தியர் 6:17). அவர் தன்னுடைய எஜமானைப் பிரியப் படுத்தவே நாடினார் (கலாத்தியர் 1:10). பிரியமான வாலிபர்களே! நீங்கள் இதுபோன்ற குணாதிசயங்களைப் பெற்றிருக்கிறீர்களா? கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய விருப்பமுள்ளவர்களாயிருக்கிறீர்களா? அவருக்கு ஊழியக்காரனாயிருப்பது என்பது ஒரு ராஜாவாக இருப்பது போன்றதாகும். பேதுரு இதைப்பற்றிச் சொல்லும்போது "நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படித் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்று சொல்கிறார். எனவே இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியக்காரனாக இருப்பது ஒரு ராஜாவைப் போல் இருப்பதாகும். நாம் முழுமையான சுதந்திரத்தைப் பெற ஒரே வழி அவருக்கு அடிமையாக இருப்பது தான். (யோவான் 8:36; ரோமர் 6:18,22).

ஆகையால், அன்பான வாலிபர்களே! மேலே நாம் பார்த்த கருத்துக்களின்படி, நாம் உண்மையாகவே தேவனுடைய வேலைக்காரர்களாக இருக்கிறோமா என்று எண்ணிப்பாருங்கள். வேலைக்காரர்களாக மாற தீர்மானம் எடுங்கள்.

**BENNY MARTIN**

**சங்கீதங்கள் புத்தகம் தாவீதுக்கு மாத்திரம் சொந்தமல்ல**


1. தாவீது - 73
2. ஆசாப் - 12
3. கோராகின் புத்திரர் - 10
4. சாலமோன் - 1 (அ) 2
5. எஸ்ராகியனாகிய ஏமான் - 1
6. ஏஸ்ராகியனாகிய ஏத்தான் - 1
7. மோசே - 1

(மொத்தம் 103 சங்கீதங்களுக்குப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது)

சிறுவர் பகுதி

# விசுவாசத்தின் உலை

**வி**லை மதிப்புள்ள தங்கம், வெள்ளி, ஆகியவற்றோடு, ஈயம், செம்பு போன்றவற்றை சேர்ப்பது மிகவும் சுலபம். சொல்லப்போனால் தங்கம், வெள்ளி ஆகியவை நிலத்திலிருந்து எடுக்கப்படும் போதே இவைகளோடு கலந்திருக்கின்றன. சரி இப்படி கலந்திருப்பவைகளை எப்படி பிரிப்பது? என்று பார்ப்போம்.



தங்கம் மற்றும் வெள்ளி போன்ற விலையுயர்ந்த உலோகங்கள் சுத்தமானவைகளா என்று சோதித்து பார்ப்பது மனிதன் வாழ்ந்த எல்லா காலகட்டத்திலும் இருந்தே வந்துள்ளது. அதைப் பரிசோதித்து மற்ற உலோகங்களிலிருந்து அவைகளை பிரிப்பதும் அதைப்போலவே எல்லா காலத்திலும் இருந்தது தான். அதற்கு பல வழிமுறைகள் உண்டு. அதில் ஒன்று, உலோகங்கள் ஒன்றோடு ஒன்று சேரும் பொழுது, என்ன மாற்றம் ஏற்படுகிறது என்பதை வைத்து பிரிப்பது

இந்த விதத்தில் சுத்தம் செய்ய தேவையான பொருட்களாக, சல்லடை போன்ற ஒரு பாத்திரம் தேவை, இதற்கு பேர் (Cupel) க்யூபெல். தேவையான

அளவு செம்பு (lead). அத்தோடு, காற்று ஊதுவதற்கு குழாய்கள் மற்றும் சோதிக்கப்படவேண்டிய தங்கம்.

இதில் என்ன செய்கிறார்கள் தெரியுமா? தொடர்ந்து படியுங்கள்! செம்பையும், தங்கத்தையும் உருக்கி, ஆக்ஸிஜன் செம்பின் மீது பட்டு, அந்த செம்பு, தங்கத்தோடு ஒட்டியிருக்கும் மற்ற உலோகங்களை எடுக்கிறது. (தங்கத்தை தவிர). அதன் மூலம் கடைசியில் சுத்தமான தங்கம் கிடைக்கிறது.

சரி, இப்பொழுது நாம் பாடத்திற்கு வருவோம்!. தேவன் சொல்கிறார் நம்மை நம் விசுவாசத்திற்காக சோதிக்கிறார் என்று. எரேமியாவிடம் தேவன் சொல்லும்போது 16:27-30ல் **நீ என் ஜனத்தின் வழியை அறிந்து கொள்ளவும், சோதித்துப் பார்க்கவும் நான் உன்னை அவர்களுக்குள்ளே துருகமாகவும், அரணாகவும் வைத்தேன். அவர்களெல்லாரும் முரட்டாட்டமான அகங்காரிகளும், தூற்றித் திரிகிறவர்களுமாயிருக் கிறார்கள். அவர்கள் வெண்கலமும், இரும்புமானவர்கள்; அவர்க ளெல்லாரும் கெட்டவர்கள். துருத்தி வெந்தது. ஈயம் நெருப்பினால் அழிந்தது. புடமிடுகிறவனுடைய பிரயாசம் விருதாவாய்ப் போயிற்று. பொல்லாப்புகள் அற்றுப்போகவில்லை. அவர்கள் தள்ளுபடியான வெள்ளி என்னப்படுவார்கள். கர்த்தர் அவர்களைத் தள்ளிவிட்டார்.** இன்னும் சொல்லப்போனால் எருசலேம் மக்களிடத்தில் ஆவிக்குரிய காரியங்களுக்கு மதிப்பு இல்லாமல் இருந்தது. அவர்கள் தங்களை தூற்றிக் கொண்டு இருந்தார்கள். தேவன் அவர்களை அவருடைய உலைக்களமாகிய க்யூபெல்லில் பார்த்து, எருசலேமின் குடிகளுக்குள்ளாக மின்னக்கூடிய அளவில் சுத்தமான விசுவாசம் உள்ள யாரையும் கண்டுபிடிக்கப் போவதில்லை.

இதே போல், தம் மக்கள் அனைவரின் விசுவாசத்தையும் தேவன் சோதிக்க இருக்கிறார். அனைவருக்கும் நியாயந்தீர்ப்பு இருக்கும். எனவே இந்த இடைப்பட்ட காலத்தில் நாம் தவறாமல் நம்முடைய விசுவாசத்தை ஆவிக்குரிய நிலையை பரிசோதித்துப் பார்க்க வேண்டும்.

II கொரி. 13:3ல் இதைத்தான் பவுல் கூறுகிறார். நாம் உலகத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு நாளும் நம் விசுவாசத்திற்கான உலையாகவே இருக்கிறது. (Furnace of faith) முடிவில் தேவனுடைய பார்வையில் பிரியமானவர்களாய் சுத்தமானவர்களாய் காணப்பட வேண்டும். அப்படி இருக்க வேண்டுமென்றால் தேவனுடைய கற்பனையை கைக்கொள்ள வேண்டும். அப்படி செய்வோமா? செய்வோம். அதன் மூலம் தேவாசீர் பெறுவோம், இச்சிறுவயதிலிருந்தே!!.

***R. Abel Rodger Nayagam***

# விசுவாசத்தின் அடிப்படைகள்

ஒன்றான மெய் சபையை அடையாளம் கண்டு கொள்வதற்காக புதிய ஏற்பாட்டை விபரமாக ஆராய்ந்து கொண்டிருக்கும்போது, சபைக்கான தேவனுடைய மாதிரியின் ஒரு பகுதி அதனுடைய ஆராதனை என்று நாம் கவனித்தோம். அந்த ஆராதனை ஆவியோடும், உண்மையோடும் இருக்க வேண்டும். ஆவியோடும் என்றால் உண்மை அல்லது சரியான மனதோடு, உண்மையோடும் என்றால் புதிய ஏற்பாட்டில் தேவனுடைய வார்த்தைக் கேற்ப இருக்க வேண்டும்.

புதிய ஏற்பாட்டு மாதிரியில் இயேசு கட்டளையிட்ட ஒரு காரியம் என்னவென்றால் கிறிஸ்தவர்கள் கர்த்தரின் பந்தியில் பங்குபெற வேண்டும். அப்பமானது அவருடைய சரீரத்தை நினைவுபடுத்துகிறது, அதற்கு அடையாளமாக இருக்கிறது, அதேபோல திராட்ச ரசம் அவருடைய இரத்தத்தை நினைவுபடுத்துகிறது, அதற்கு அடையாளமாக இருக்கிறது. 1கொரிந்தியர் 11:23-29 வரை நாம் வாசிக்கும் போது இயேசுவை நினைவுகூரும்படி அப்பத்தைப் புசிக்கிறோம், திராட்ச ரசம் குடிக்கிறோம். அதுமாத்திரமல்லாமல் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறோம்.

1கொரிந்தியர் 11:27-29 வசனங்களை வாசியுங்கள் இங்கே கர்த்தருடைய அப்பத்தைப்புசிக்கிற, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிற ஒவ்வொருவரும் தன்னைத்தான் சோதித்தறியவேண்டும் என்று பார்க்கிறோம். ஏன்? நீங்களும், நானும் கர்த்தருடைய அப்பத்தைப் புசிக்கிறபோதும், அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறபோதும் அவற்றை நாம் அபாத்திரமாய் செய்யவில்லை என்பதை நாம் நிச்சயித்துக் கொள்ளவேண்டும்.

அதை செய்வது உங்களுக்கும், எனக்கும் ஏன் முக்கியமாக இருக்கிறது? தயவு செய்து 27,28 வசனங்களை மறுபடியும் ஜாக்கிரதையாக கவனியுங்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ அவன் கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ள வனாயிருப்பான்! நமக்கு நாமே ஆக்கினைத் தீர்ப்பை வருவித்துக் கொள்ளும்படியாக நாம் புசிக்கிறோம், குடிக்கிறோம். தெளிவாக இது தேவனுக்கு ஒரு முக்கியமான விஷயமாகும் நமக்கும் இது முக்கியமானதாக இருக்கவேண்டும்.

இவைகளை மனதில் கொண்டு உங்களுக்கும் எனக்கும் கர்த்தருடைய பந்தியில் அபாத்திரமாய் பங்குபெறுவதென்றால் என்ன என்பதை நிர்ணயிப்பது அவசியமாகும். தேவன் 29 ஆம் வசனத்தில் அதன் அர்த்தத்தை சொல்கிறார். கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாதபோது கர்த்தருடைய பந்தியில் நாம் அபாத்திரமாய்ப் பங்கு பெறுகிறோம். அதாவது நாம் அப்பம் புசிக்கும்போது இயேசு நமக்காக ஒப்புக்கொடுத்த அவருடைய சரீரத்தையே நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். நிச்சயமாகவே, நாம் திராட்சரசத்தைக் குடிக்கும்போது இயேசு நம்முடைய பாவமன்னிப்புக்காக சிந்த அனுமதித்த அவருடைய இரத்தத்தையும் நினைத்து கொண்டிருக்க வேண்டும் என்றும் பொருள்படும்.

ஆகவே, கர்த்தரின் பந்தியில் பங்கேற்கும் போது, அதாவது, அவருடைய மரணத்தை நினைவுகூரும்போது அவருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் பற்றிய தீவிர சிந்தை உடையவர்களாயிருக்க வேண்டும். அப்படி செய்ய நாம் தவறும்போது கர்த்தருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவர்களாயிருப்போம். நமக்கு நாமே ஆக்கினைத்தீர்ப்பை வருவித்துக்கொள்ளும்படியாக புசிக்கவும், குடிக்கவும் செய்வோம்.

**இது இன்னொரு கேள்வியை எழுப்புகிறது**

கர்த்தருடைய பந்தி எப்போது அனுசரிக்கப்படவேண்டும் அப்போஸ்தலருடைய நடபடிகள் 20:7ஐ வாசிக்கும்போது பவுலும் துரோவாவிலுள்ள கிறிஸ்துவின் சபையும் வாரத்தின் முதல் நாள் அதாவது, ஞாயிற்றுக்கிழமை அப்பம்பிட்டது என்று பார்க்கிறோம். தெளிவாக அப்போது அந்த கர்த்தருடைய சீஷர்கள் தேவனை ஆராதிப்பதற்குத்தான் கூடினார்கள். இது போன்ற வசனப்பகுதிகளில் "அப்பம் பிட்டார்கள்" என்ற சொற்றொடர் கர்த்தரின் பந்தியில் பங்குபெறுவதைத்தான் குறிக்கிறது என்பது தெளிவாகிறது. அதைப்பற்றி தேவன் தம்முடைய வசனத்தின் மூலமாக என்ன சொல்கிறார் என்பதை கவனிப்போம்.

1 கொரிந்தியர் 10:16ஐ நாம் வாசிக்கும்போது நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறது என்பதை எழுதுவதற்கு அப்போஸ்தலனாகிய பவுலை தேவன் ஏவினார். மேலும் பவுல் பாத்திரம் (திராட்ச ரசம்) கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறது என்று பதிவு செய்திருக்கிறார். இவைகளெல்லாம் கர்த்தரின் பந்தியைக் குறிக்கிறது என்பது தெளிவாகிறது.

எனவே முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தேவனுடைய வசனத்தைப் படிப்பதற்காகவும் கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவதற்காகவும் வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமைகூடினார்கள். இதை

செய்வதற்குத்தான் கிறிஸ்துவிடமிருந்து நமக்கு அதிகாரம் இருக்கிறது! வாரத்தின் ஏதோ ஒரு நாளில் கர்த்தரின் பந்தியை அனுசரிப்பதற்கு நமக்கு அதிகாரம் இல்லை!

அப்போஸ்தலருடைய நடபடிகள் 20:16ஐ வாசியுங்கள் பவுல் கூடுமானால் பெந்தெகொஸ்தே பண்டிகை நாளிலே எருசலேமிலிருக்க வேண்டுமென்று தீவிரப்பட்டதை ஜாக்கிரதையாக கவனியுங்கள்.

அப். 20:6ல் நாம் வாசிக்கும்போது அப்போஸ்தலனாகிய பவுலும் அவரோடிருந்தவர்களும் துரோவாப்பட்டணத்தில் ஏழுநாட்கள் தங்கியிருந்தார்கள் பவுல் தீவிரமாக எருசலேமுக்கு செல்ல வேண்டியிருந்ததால் அவர்கள் துரோவாவுக்கு திங்கட்கிழமை தான் வந்திருக்க வேண்டும். ஆனால், பவுல் துரோவா பட்டணத்தில் இருந்த கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளுடன் தேவனை ஆராதிப்பதற்காக ஏழு நாட்கள் காத்திருந்தார்.

அவர்கள் சந்தேகமின்றி ஒவ்வொரு ஞாயிறன்றும் கர்த்தரின் பந்தியை அனுசரிப்பார்கள் என்பதை பவுல் நன்கு அறிந்திருந்தார். தெளிவாக இன்றும் தேவன் உங்களிடமிருந்தும் என்னிடமிருந்தும் அதைத்தான் எதிர்பார்க்கிறார்.

1 கொரிந்தியர் 16:1,2 யை வாசியுங்கள் இது ஆதிக்கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை சபையாக கூடினார்கள் என்பதற்குத் தெளிவான அடையாளமாகும். தேவனை ஆராதிப்பதற்காக அவர்கள் அப்படி செய்தார்கள். மேலும், தேவனை ஆராதிக்கும்போது கர்த்தருடைய வேலைக்காக அவர்கள் காணிக்கை எடுத்திருக்கிறார்கள்.

இந்த வசனங்களை வாசிக்கும்போது மதஉலகில் உள்ள நம்முடைய பிரியமான நண்பர்கள் என்ன முடிவுக்கு வருகிறார்கள்? ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காணிக்கை எடுக்க வேண்டும்! அது மதிப்புள்ள ஒரு முடிவுரைதான்.

அப். 20:7ல் நாம் பார்த்தபடி கர்த்தருடைய பந்தி சம்பந்தமாக அங்கே உபயோகப்படுத்தப்பட்ட மொழிநடையும் நாம் பார்க்கின்ற இந்த வசனத்தின் மொழிநடையும் ஒரே மாதிரியாகத் தான் இருக்கிறது. ஆயினும் பெரும்பாலான மார்க்க பிரிவினை கூட்டத்தார் கர்த்தரின் பந்தியில் மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது கால்வருடத்திற்கு ஒரு முறையோ தான் பங்கு பெறுகிறார்கள். பிரியமானவர்களே, இது ஒரே மாதிரியாக இல்லை! காணிக்கையானது ஒருவொரு ஞாயிற்றுக்கிழமையும் சேகரிக்கப்பட வேண்டுமென்றால் கர்த்தருடைய பந்தியும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் அனுசரிக்கப்படவேண்டும்.

வசனத்தின் இவ்வகையான புரிந்துகொள்ளுதலை சிலர் ஆட்சேபிக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கர்த்தரின் பந்தியில் பங்கேற்க வேண்டும் என்று தேவன் சொல்லவில்லை என்கிறார்கள். அதை நாம் விவரமாக ஆராய்வோம். முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். (ரோமர் 15:4).

இதை மனதில் கொண்டு யாத்திராகமம் 20:8ஐ வாசியுங்கள். தேவன் தம்முடைய ஜனங்களிடம் ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரிக்கும் படியாகக் கட்டளையிட்டார். ஓய்வு நாள் என்பது ஏழாம் நாள் அதாவது சனிக்கிழமை பிரியமானவர்களே, தேவன் இஸ்ரவேலர்களிடம் ஒவ்வொரு ஓய்வு நாளையும் பரிசுத்தமாக ஆசரிக்கும்படி சொன்னாரா? முற்றிலுமாக இல்லை! தேவனுக்கு அதை சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஓய்வு நாள் வரும் போதெல்லாம் அதை பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும் என்று இஸ்ரவேலர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். ஒவ்வொரு வாரமும் ஓய்வு நாள் வந்தது, இஸ்ரவேலர்கள் தேவனிடத்தில் உண்மையுள்ளவர்களாய் இருந்த போது ஒவ்வொரு நாளையும் பரிசுத்தமாக ஆசரித்தார்கள்.

எனவே தேவன் முன்பு எழுதியிருக்கிறவைகளைக் கொண்டு நீங்களும் நானும் என்ன பாடத்தைக் கற்றுக் கொள்ளவேண்டும்? தேவனுக்கு கீழ்ப்படியும்படியாகவும், அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கும்படிக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற வேண்டும். தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமென்றால் நீங்களும், நானும் வாரந்தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறவேண்டும். மாதத்திற்கு ஒரு முறை அல்ல, ஒரு வருடத்திற்கு ஒரு முறை அல்ல, தினந்தோறும் அல்ல. மேலும் ஞாயிற்றுக்கிழமை அல்லாத வேறொரு கிழமையில் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற நமக்கு எந்த அதிகாரமும் இல்லை.

ஆராதனைக்கான தேவனுடைய மாதிரியின் இந்த பங்குக்குப் பொருந்தாத எந்த சபையும் இயேசு கிறிஸ்துவால் ஸ்தாபிக்கப்பட்ட சபையாகாது என்பதை அன்புடனும், தாழ்மையுடனும் நாம் மக்களுக்கு சொல்ல வேண்டும்! இப்படிப்பட்ட சபைகளில் ஆராதனை செய்யும் எந்த நபரும் இயேசு சொன்னது போல வீணான ஆராதனை செய்கிறார். மத்தேயு (15:7-9) ஞாயிற்றுக்கிழமை தோறும் தேவனை ஆராதிக்கும்படியாக கூடின கிறிஸ்துவின் சபை அங்கத்தினர் செய்த இரண்டாவது காரியத்தை நாம் பார்ப்போம்.

**கர்த்தருடைய வேலைக்காக அவர்கள் பொருளாதார உதவிகளைச் செய்தார்கள்**

நாம் இப்போது தான் 1கொரிந்தியர் 16:1,2 வசனங்களை வாசித்தோம். அந்த வசனங்களில் தேவன் ஒரு சபையானது தன்னுடைய வேலைக்காக எப்படி பணத்தை சேகரிக்க வேண்டும் என்று தம்முடைய

எதிர்பார்ப்பை விருப்பத்தை தேவனால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் மூலமாக தேவன் வெளிப்படுத்தியிருக்கிறார். அதாவது ஒவ்வொரு கிறிஸ்தவனும் வாரத்தின் முதல்நாள் தோறும் தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன்.

1,2ம் வசனங்களில் தேவனால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் காணிக்கையைக் குறிப்பிட்டுப் பேசுகிறார். வேறொரு வார்த்தையில் சொன்னால் ஒவ்வொரு கிறிஸ்தவனும், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவருக்கென்று காணிக்கை கொடுக்கவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். இந்த வசனபகுதியும், மொழிநடையும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் செலுத்தும் காணிக்கையானது பிராந்திய சபையில் உள்ள கருவூலத்தில் கர்த்தருடைய வேலைக்காக சேர்த்து வைக்க வேண்டும் என்று காட்டுகிறது.

**ஒவ்வொரு கிறிஸ்தவனும் எவ்வளவு கொடுக்க வேண்டும்?**

புதிய ஏற்பாட்டில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று தேவன் ஒரு குறிப்பிட்ட தொகையையோ சதவீதத்தையோ குறிப்பிட்டு சொல்லவில்லை. ஆயினும் அவரைப்பிரியப்படுத்த வேண்டுமென்றால் உற்சாகமாய்க் கொடுக்கவேண்டும் என்பதை தெளிவுபடுத்திவிட்டார். கர்த்தருக்குச் சித்தமானால் வருகின்ற மாதம் இந்த பாடத்தைக் குறித்து அநேக வசனங்களைப் படிப்போம். அதுவரை புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருக்கிற அவருடைய நேசகுமாரனுடைய ஒன்றான மெய்சபையில் தேவனை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்க ஜாக்கிரதையாக பாடுபடுவோம்.

**CHARLIE DIPALMA** **BENNY MARTIN**

**வெளிப்படுத்தின விசேஷத்தில் பாக்கியவான்கள்**

1. இவைகளை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், கைக் கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள் [1:3]
2. கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள் [14:13]
3. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப் பட்டவர்கள் பாக்கியவான்கள் [19:9]
4. முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவான் [20:6]
5. நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களை காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான் [16:15]

# பொறாமை - எலும்புருக்கி நோய்

திருமறை ஆசான் வாசகர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இன்ப நாமத்தில் அன்புடன் வாழ்த்துகிறோம். சுகமாயிருப்பீர்களாக.

பிரியமானவர்களே நம்முடைய நாட்களில் நோய்களுக்குப் பஞ்சமே இல்லை. ஆனால், எல்லா நோய்களுக்கும் சில, பல அறிகுறிகள் இருக்கின்றன. மஞ்சள் காமாலை வந்த ஒரு நபருக்குக் கண்கள் மஞ்சள் நிறமாக இருக்கிறது. இரத்தசோகையால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு முகம், உதடு ஆகியவை வெளிறிப்போய் காணப்படுகிறது. காய்ச்சல் வந்தால் உடல் வெப்பம் கூடுகிறது.

எப்படி மருத்துவர்களால் கண்டுபிடிக்கப்படாத சில நோய்கள் அறிகுறிகள் என்னவென்று தெரியாமல் தடுமாறுகிறார்களோ அதே போல ஆவிக்குரிய வகையிலும் சில நோய்கள் இருக்கின்றது. அதுதான் பொறாமை என்னும் எலும்புருக்கி நோய். (நீதி மொழிகள் 14:30) அது வெளியே தெரியாது.

பொறாமை என்பது என்ன? ஏன் பொறாமை வருகிறது? பொறாமையினால் ஏதாவது சாதிக்க முடியுமா? என்பவற்றிற்கெல்லாம் பதில் காணும் ஒரு சிறு முயற்சிதான் இந்தச் செய்தி.

## I பொறாமை ஏன் வருகிறது?

கல்லாமை, இல்லாமை, இயலாமை இது போன்ற பல ஆமைகள் நம் இருதயத்தில் புகுந்து பொறாமையாக உருவெடுக்கின்றது. சாதாரணமாக மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் வெளிப்படையாக அறிய முடியும். எலும்புருக்கி நோய் மனிதனின் தோல், தசை, நரம்புகள் இவைகளை யெல்லாம் தாண்டி எலும்பின் மத்தியில் உள்ள ஊண் (மஜ்ஜை) என்கிற பகுதியில் உருவாகும் ஒரு நோய். இதனைக் கண்டுபிடிப்பது கஷ்டம்.

அதுபோல பொறாமையுடைய மனிதர்களையும் இனம் கண்டுபிடிப்பது கஷ்டமான ஒருகாரியம். உலகப்பழமொழியாக, "ஆமை புகுந்த வீடு உருப்படாது" என்பார்கள். யார் வீட்டிலும் ஆமை புகுந்ததையோ, அல்லது பிறர் சொல்லியோ நான் கேட்டதில்லை, ஆனால் ஒன்று மட்டும் நானும், நீங்களும் நன்றாக அறிந்திருக்கிறோம். இன்று அநேகருடைய மனதில் "பொறாமை" எனும் ஆமை புகுந்து அநேகரின் வாழ்வைக் கெடுத்துக் கொண்டிருக்கிறது.

## பொறாமை என்பது என்ன?

தனக்கு எல்லாம் கிடைக்க வேண்டும் அடுத்தவருக்கு ஒன்றுமே இருக்கக்கூடாது. தனக்கு பலவிதமான வாகன வசதிகள் இருக்க வேண்டும் அடுத்தவருக்கு ஒரு சைக்கிள் கூட இருக்க கூடாது. தனக்கு எல்லா வளர்ச்சிக்குரிய காரியங்கள் குடும்பம், பிள்ளைகள், வீடு மற்றும் அறிவு, படிப்பு இன்னும் பல காரியங்களை தங்களுக்கு மட்டும் உரியது. பிறர் அதில் வளர்ச்சியடைய கூடாது என்று நினைக்கும் பொறுத்துக்கொள்ள முடியாமை

தான் பொறாமை. என்னிடத்தில் இல்லையே! அவருக்கு மட்டும் எப்படி இவ்வளவு நன்மைகள் கிடைத்தது என்று அனுதினமும் புலம்புகின்ற மக்களை நாம் பார்க்கிறோம். இவர்கள் நம்முடன் கைகுலுக்குவார்கள், தினமும் நமக்கு வாழ்த்துச் சொல்லுவார்கள். ஒரே அலுவலகத்தில் வேலை செய்கிறவர்களாக இருப்பார்கள் ஆனால், பொறாமைத் தீயில் வெந்து கொண்டிருப்பார்கள், அவர்கள் பேசும் போது தீயின் வெப்பம் வார்த்தைகளாக வந்து விழும்.

பிரியமானவர்களே பரிசுத்த வேதாகமத்தில் பொறாமையால் உருக்குலைந்து போன அநேகரை நாம் பார்க்கிறோம்.

**B. சவுல் ராஜா**

(1சாமு 9:1-3) தன் தகப்பனுடைய கழுதைகளை தேடிக்கொண்டு போன சவுலை தேவன் ராஜாவாக ஏற்படுத்தினார். திரளான ஆசீர்வாதங் களைக் கொடுத்தார். (1சாமு 17:1-58) கோலியாத் என்கிற மகா பராக்கிரம சாலியாகிய ஒரு பெலிஸ்தன், அவனோடு யுத்தம் பண்ண இஸ்ரவேலில் ஒருவனுக்கும் தைரியமில்லை சவுல் ராஜாவையும் சேர்த்து தான் சொல்கிறேன்.

அந்த பெலிஸ்தன் தேவனை நிந்தித்தான். கடைசியில் தாவீது தன் உயிரைப் பணையம் வைத்து தேவகிருபையாலே அவனை வெற்றி கொள்கிறான். இஸ்ரவேலின் மானம் காப்பாற்றப்பட்டது.

இதைப் பார்த்த ஜனங்கள் தாவீதைப் புகழ்ந்து (1சாமு 18:7-10) சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று பாடினார்கள். இதை சவுலால் பொறுக்க முடியவில்லை.

பிரியமானவர்களே தாவீது கோலியாத்தை கொல்லும் முன்பும் / பின்பும் சவுல் ராஜாவாகத்தான் இருந்தான். பொறாமை வந்தது அதின் விளைவாக கொலை வெறிபிடித்து அவன் அலைந்து திரிந்ததை நாம் பார்க்கிறோம். ஆனால், முடிவிலே அந்தோ! பரிதாபம் சவுல் தன் பட்டயத்தை நட்டு தானே அதின்மீது பாய்ந்து அப்போது கூட சாகாமல், ஒரு மனுஷனை நோக்கி என்னைக் கொன்று போடு என்று கெஞ்ச வேண்டியதாய் இருந்தது (II சாமு 1:5-9).

பிரியமானவர்களே, மகிமையாய் வாழவேண்டிய ராஜா எப்படி பரிதாபமாய் இறந்தான் பார்த்தீர்களா? காரணம் என்ன? எங்கே தாவீது ராஜாவாக வந்து விடுவானோ என்கிற பயம்தானே! "காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் விடாது" என்பது போல "பொறாமையுடையவர்கள் தங்களையே அழித்துக் கொள்வார்கள்" என்பது நிதர்சனமான உண்மை. கலா 5:26..... ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமல் இருக்ககடவோம்.

**C. ஆமான் என்ற படைத்தளபதி** (எஸ்தர் 5:9-14)

ஆமான் தன் எஜமானிடம் கனமும், நல்ல பதவியும் இருந்தும் கூட மொர்தெகாய் தன்னை கனம் பண்ணவில்லையென ஒட்டு மொத்த யூதர்களையும் அழிக்கத் திட்டமிட்டான். தேவனுடைய மனுஷனாகிய மொர்தெகாயை தூக்கு மரத்தில் போட்டால் ஒழிய நிம்மதியில்லை என்ற நிலைதான் ஆமானுக்கு வந்தது, காரணம் பொறாமை தான் பிரியமான

வர்களே. முடிவிலே அதே மரம் ஆமானை தூக்கிப் போடுவதற்குப் பயன்பட்டது. (எஸ் 7:9-10) பிரியமானவர்களே இன்றும் இப்படிப்பட்ட அநேகம் மனிதர்களைப் பார்க்கிறோம். பொறாமையினால் தங்களால் அநேக காரியங்களை சாதிக்க முடியும் என நம்புகின்றனர். மனிதனுடைய பொறாமையால் எல்லாம் முடியும் என்றால் தேவனுக்கு என்ன வேலை (பிரசங்கி 3:11) தேவன் ஆதிமுதல் அந்தம் மட்டும் செய்து வரும் காரியங்களை மனுஷன் கண்டுபிடியான். கொலோ 3:8 பொறாமையை விட்டுவிடுங்கள், விலகுங்கள் கொலோ 3:14 அப்படிப்பட்டவர்கள் அன்பைத் தரித்துக் கொள்ளாதவர்கள்.

**2. நமதாண்டவரின் வாழ்வில்**

பொறாமை இல்லை, இல்லவே இல்லை எபே 4:20 நீங்களோ இவ்விதமாய் கிறிஸ்துவை கற்றுக்கொள்ளவில்லை மத். 26:59,60 அநேகர் பொய் சாட்சிகளை ஆண்டவருக்கு விரோதமாய் சொன்னார்கள். முடிவிலே மத். 27:17 பொறாமையினால் தான் அவரை சிலுவையில் அறைந்தனர். இவர் எப்படி தேவகுமாரன் என்று சொல்லலாம், தேவாலயத்தை இடித்து மூன்று நாளில் எழுப்புவேன் என்று எப்படிச் சொல்லலாம். இதுதான் குற்றச்சாட்டு.

எந்த ஆண்டவரை ஆகாதவரென்று சிலுவையிலே ஒப்புக் கொர்டுத்தனரோ (அப். 2:36-41) அவரே கிறிஸ்துவானார். அவராலே யன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை (அப். 4:12) (பிலி. 2:10-11) வானோர் பூதலத்தோர் யாவருடைய முழங்கால்களும் அவரது நாமத்திலே முடங்கவேண்டியதாய் இருக்கின்றது. பிரியமானவர்களே பொறாமை கொண்டவர்கள் முடிவிலே மண்டியிடுகிறார்கள் அல்லது மடிந்து போகிறார்கள். நம் நிலைமை என்னவோ?

**தேவன்மீது நம்பிக்கை வைப்போம் (1 சாமு. 2:6-9)**

தேவன் கொல்லுகிறார், அவரே உயிர்ப்பிக்கிறார், அவரே தரித்திரம் அடையச் செய்கிறார். அவரே ஐசுவரியமடையச் செய்கிறார். (சங். 24:1) பூமியும் அதின் நிறைவும் அவருடையது. யோசேப்பை சிறைச் சாலையிலிருந்து அதிகார பீடத்திற்கு உயர்த்திய தேவன் நேபுகாத் நேச்சாரை ராஜ பதவியிலிருந்து தாழ்த்தி ஒரு மிருகம் போலாக்கினார் (1பேது 5:6) ஏற்ற வேளையில் தேவன் உயர்த்தும்படி காத்திருப்போம்.

அன்பானவர்களே நம் இருதயத்தில் தேவன் மீது விசுவாசம் குறையும்போதுதான் பொறாமை குடிகொள்கிறது. (எபி. 11:6) தேவன் தம்மை தேடுவோர்க்கு பலன் அளிப்பவர் என்று நம்புவோம். ஆண்டவரிடம் கோபம் கூட இருந்தது (யோவா 2:13-17) ஆனால் பொறாமை இல்லை (யோவா 8:46) யாதொரு பாவமும் இல்லை. பொறாமையை விட்டு விட்டு தேவ பக்தியோடு வாழ்வோம்.

ஒரு இருட்டு வீட்டில் சிறு தீக்குச்சியை பற்ற வைத்தால் வீடு வெளிச்சம் பெறுவது போல இந்த ஜீவ வார்த்தைகள் நம்மிடம் உள்ள பொறாமைக்கு நேராக வீசப்பட்ட வெளிச்சம் மட்டுமல்ல பொறாமையை அப்புறப்படுத்தும் அக்கினி இந்த செய்தி, தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

அன்புடன், ***S. Pitchaimuthu***

# சந்தோஷமாயிரு

அன்புத் திருமறை ஆசான் வாசக சகோதர, சகோதரிகளுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நீங்கள் சந்தோஷமாயிருக்க வேண்டுமென்பது நம் தேவனுடைய சித்தம். மாறாக நீங்கள் வருத்தப்படுவதை ஆனந்தமாய் ரசிப்பது பிசாசின் வேலை, காரணம் இவ்வுலகக் கவலைகளில் ஒருவன் சிக்கும்போது அவனை தேவனிடமிருந்து பிரித்துவிடுவது பிசாசுக்கு சுலபமானது (II கொரி 7:10).

நாம் தேவனுக்குள் மகிழ்ச்சியாயிருப்பது நமக்குத் தான் பெலன் (நெகே 8:10) அந்தப் பெலன் குறையாமலிருக்க ஒரு சிறுபிள்ளை தன் தேவைகள் அனைத்தையும் மறந்து தன் தாயின் தோளில் சாய்ந்திருப்பதைப் போல, நாமும் ஒரு தாயை விடச் சிறந்த நம் தேவனைச் சார்ந்திருக்கப் பழக வேண்டும் (ஏசா 49:14-16) பல நேரங்களில் நாம், கடலின் மீது நடந்த பேதுரு சூழ்நிலையைப் பார்த்து அற்ப விசுவாசியானது போலவே நடந்து கொள்கிறோம். பிறகு நாம் எப்படி சந்தோஷமாயிருப்பது? ஆனால், சந்தோஷமாயிரு....! என்பது நம் தேவனின் அறிவுரை (பிலி. 4:4, சங். 37:4, ரோம 12:12).

சரி, மனிதன் ஏன் சந்தோஷமாயிருக்க முடிவதில்லையென்று சற்று பார்ப்போம். சங்கீத புத்தகம் 37ம் அதிகாரத்தின்படி முதலாவது ஒருவர் தவறு செய்யும் மற்றவரைக் குறித்து எரிச்சலும், பொறாமையும் கொள்ளும்போது தன்னுடைய மகிழ்ச்சியை இழந்து போகிறார் (37:1,7) மற்றவர் செய்யும் தவறைச் சுட்டிக்காட்டவேண்டாமா? தட்டிக்கேட்கக்கூடாதா? என்று நீங்கள் ஆவேசப்படுபவரா? அப்படியெனில் நீங்கள் ஒருபோதும் சந்தோஷமாக, சமாதானமாக இருக்கவே வாய்ப்பில்லை! நம் ஆண்டவர் போதனைப்படி நம் கண்ணிலிருக்கும் உத்திரத்தை நோக்க வேண்டும், சீர் செய்ய வேண்டும். நாம் சாத்தானின் தந்திரத்தில் சிக்குண்டு நம் சந்தோஷத்தை ஏன் நாம் இழக்க வேண்டும்? (யோபு 20:4,5).

அடுத்ததாக, இவ்வுலகக் கவலைகள் நம்மை நெருக்குவதால் நாம் சந்தோஷமாயிருக்க முடிவதில்லை. (மத். 13:22) உணவுக்காகவும், உடைக்காகவும் கவலைப்படுவதை நம் ஆண்டவர் மட்டுமே அஞ்ஞானம் என்கிறார் (மத் 6:32) மேலும் தேவனுக்குப் பிரியமாய் நடப்பதையும் கவலைகளே தடை செய்கிறது (லூக் 21:34) என்று எச்சரிக்கிறார்! ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.... நீங்கள் எதற்காகக் கவலைப்பட்டு கலங்கு கிறீர்களோ அது உங்களுக்குக் கிடைத்தாலும் நீங்கள் திருப்தியடையப் போவதில்லை! (ஏசா 55:1,2).

மேலும் சிலர் பண வசதி வந்துவிட்டால் நான் சந்தோஷ மாயிருப்பேன் என்று நினைக்கிறார்கள். வேதம் சொல்வதை கவனியுங்கள்! லூக். 12:13,21 மற்றும் 33,34ம் வசனங்கள் ஐசுவரியத்தைப் பற்றி தெளிவான விளக்கம் தருகிறது. பணவசதிக்கும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கும் சம்பந்தமே யில்லை. உண்மையில் மற்றவரை நேசித்து, மன்னித்து பொருளுதவி செய்து வாழும் வாழ்க்கையே மகிழ்ச்சியானது என ஆண்டரவர் சொல்கிறார். (பிரச. 4:8, 5:10,11) (லூக். 18:22).

ஆகவே, சங்கீதம் 37ம் அதிகாரத்தின்படி நாம் கர்த்தர் பேரில் நம்பிக்கை வையாமல் மற்றவர் பேரில் எரிச்சல்படுவது, சத்தியத்தில் நாம் நடவாதது, நம் வழியை தேவனுக்கு ஒப்புக்கொடாமல் கோபப்படுவது (யாக். 1:19,20) மற்றும் கர்த்தருக்குக் காத்திராமல் அவசரப்படுவது போன்றவை நம் சந்தோஷத்தைக் குலைக்கிறது.

சரி உண்மையில், எது சந்தோஷம் என்றால்; மனந்திரும்பும் பாவியினிமித்தம் உண்டாவது (லூக். 15:6,7) இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் தான் பெற்ற இரட்சிப்பை மற்றவரோடு பகிர்ந்து கொள்வது தேவனுடைய சித்தம். இவ்வுலகில் நோ-வேகன்சி சொல்லாத ஒரு வேலையிருக்குமானால் அது சுவிசேஷப்பணியே (அறுப்பு மிகுதி, வேலையாட்கள் குறைவு) எனவே மற்றவரைக் கர்த்தருக்குள் கொண்டுவரும் பணியில் உண்மை சந்தோஷமடைவோம்.


கர்த்தருக்குள் எப்படி சந்தோஷமாயிருக்க முடியும்? சங் 40:16ன் படி தேவனைத் தேடுகிற அனைவரும் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்கள் என்கிறான் தாவீது, நம் ஆண்டவரும் தேடுங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் பெற்றுக்கொள்வீர்கள் என்றார் அல்லவா? தேடுங்கள் என்பது நம் வாழ்வில் தேவனுக்குரிய காரியங்களை முதலிடம் கொடுப்பது ஆகும். அதாவது வேதம் வாசித்தல், கருத்தோடு பிரசங்கத்தை கவனிப்பது இடைவிடாமல் சபைகூடுவது; உண்மையான சகோதர சிநேகத்தில் நிலைத்திருப்பது போன்ற ஆவிக்குரியக் காரியங் களைக் குறிக்கும். (பிலி. 2:4,12) தட்டுங்கள் என்பது சுவிசேஷத்தினால் மற்றவர் மனக்கதவைத் தட்டுதலையும், கேளுங்கள் என்பது நம் தேவனிடம் விசுவாசத்தோடு ஜெபிப்பதையும் குறிக்கிறது அல்லவா?.

புசிப்பும், குடிப்பும் உண்மை சந்தோஷமல்ல (ரோம 14:17) மாறாக நேர்மையாக வாழ்ந்து துன்பப்படுவதும் (மத்5:10) பாவமன்னிப்பும் (அப். 2:41, சங் 32:1) கிறிஸ்தவ வாழ்வில் இடறலாக இருக்கும் பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடுவதும் (நீதி. 28:13, 1 யோ 1:9) தேவனுக்குப் பயந்து அவருடைய கட்டளைபடி செய்வதிலும் (பிர 12:13, சங். 128:1) எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய பெயர்கள் பரலோகில் (லூக். 10:20) எழுதப்பட்டிருப்பதிலுமே உண்மை சந்தோஷம் உள்ளது.

ஆகவே, நாம் சந்தோஷமாயிருக்கவே தேவன் விரும்புகிறார். அதற்கான ஏராளமான சாட்சிகளையும், ஆலோசனைகளையும் வேதம் என்னும் பொக்கிஷத்தில் வைத்திருக்கிறார். மற்றவனுக்கில்லாத வசதியை ஒருவன் பெற்றிருக்கும் போது எப்படி பெருமைப்படுவானோ அதைக் காட்டிலும் நீங்கள் இவ்வுலகில் உள்ள, ஏராளமான மில்லியன், பில்லியன் மக்களை விட விசேஷித்தவர்கள், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்று அறிந்து சந்தோஷமாயிருங்கள்....!

தேவன் உங்கள் இருதயத்தின் வேண்டுதல்களை நிச்சயம் அருள் செய்வார்! ஆமென்..... (சங் 37:4).

**சகோ. பாண்டியன், ஊழியர்**
**பாண்டிச்சேரி**



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

## TV PROGRAM




**Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures**

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postal Registration No. Erode / 26 / 2006 - 2008


# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு**

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன்பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட

**ஓர் இலவச பயிற்சி.**

**இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.**

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு. இந்தியா.

**திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.**




| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV சனி | காலை | 7:15 - 7:30 |
| தமிழன் | TV ஞாயிறு | இரவு | 9:45 - 10:00 |
| SS மியூசிக் | TV திங்கள் | காலை | 7:00 - 7:15 |


Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam. Ph : 04257 - 222555, 224555